Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JULY 7, 2022

வியாழக்கிழமை ஜூலை 07, 2022 | ஒளி: 08 கதிர்: 042 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ Free

# ரணிலுக்கு பெரும் சவால்கள் முன்வைப்பு

## நான் ரெடி

தற்போதைய நெருக்கடியில் இருந்து குறுகிய காலத்துக்குள் நாட்டை மீட்டெடுப்பதற்கும் ஸ்திரப்படுத்தவும் தயாராக இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை குறுகிய காலத்தில் தீர்த்து வைப்பதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று (06) கருத்து தெரிவித்த போதே, ஜே.வி.பியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே.வி.பி தனித்து செயற்பட விரும்பவில்லை என தெரிவித்துள்ள எம்.பி, நாட்டு பிரஜைகளும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் இந்த நோக்கத்திற்காக கட்சிக்கு தமது



ஆதரவை வழங்குவார்கள் என நம்புவதாக தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மிக நீண்ட காலத்திற்கு பிரதமர் பதவியில் இருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12

## பதவி துற

நிதி அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க விளையாடும் விளையாட்டை இத்துடன் நிறுத்துக்கொள்ள வேண்டும். நாட்டின் நிதி நிர்வாகம் குறித்து அவருக்கு எந்தத் திட்டமும் கிடையாது. எனவே ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சு பதவியில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (6) அவர் நடத்திய ஊடக சந்திப்பில் இந்தக் காரணிகளை அவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நான் இன்று முக்கிய தீர்மானங்கள் சிலவற்றை எடுத்துள்ளேன். திறைசேரிக்கு செல்லாது வேலைத்திட்டங்களை முன்னெடுக்க என்னுடைய



நிதியில் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன். ஒரே நாளில் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையை பலப்படுத்த வீசா காலத்தை நீடித்துள்ளோம்.

தொடர்ச்சி P12

## ‘காஸ்’ சனி வந்தால் ஞாயிறு விநியோகம்

■ பா.நிரோஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாடானது இம்மாத இறுதியில் அல்லது ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் முடிவுக்கு வரும் என சபையில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எஞ்சியுள்ள நான்கு மாத காலங்களுக்கு எரிவாயுவை தட்டுப்பாடின்றி வழங்க முடியும் என அரசாங்கம் நம்புவதாகவும் தெரிவித்தார். சமையல் எரிவாயு பிரச்சினை தொடர்பில் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட வாய்மூல வினாவுக்கு பதில் அளித்து உரையாற்றும் போது ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திட்டமிட்டபடி காஸ் தொகை ஒன்பதாம் திகதி கிடைத்தால், 11ஆம் திகதி அளவில் நாடு முழுவதிலும் காஸை விநியோகிக்க முடியும் என தெரிவித்தார். 11, 12ஆம் திகதிகளில் கொழும்பு நகரம் முழுவதிலும் காஸ் விநியோகிக்க முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். 12.5 கிலோ காஸ் நிறையுடைய ஒரு இலட்சத்து 40 ஆயிரம் சிலிண்டர்களை கொழும்பில் உள்ள 140 நிலையங்களில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் நாடு முழுவதிலும் ஒரு லட்சத்து 11 ஆயிரம் சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கும்

### பிரதமர் அறிவிப்பு

■ பா.நிரோஸ்

மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதோடு, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கு மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்புக்கான



நிவாரணத்தை பணமாக தருவதற்கும் அரசாங்கம்

தொடர்ச்சி P12

## “யுத்த வீரனே வெளியே வா”

### கோஷமிட்ட ஹிருணிக்கா கைதாகி பிணையில் விடுதலை

கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக நேற்று (06) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 12 பேர், நேற்று மாலை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P12

## புகையை கக்கும் கண்ணீர் குண்டு

ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக நேற்று (06) காலையில் ஹிருணிகா தலைமையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்யுமாறு இன்னுமொரு தரப்பினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்



ஈடுபட்டனர். அவர்களை கலைப்பதற்காக பொலிஸாரால் வீசப்பட்ட கண்ணீர்புகைக் குண்டு, புகையைக் கக்கிக்கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதியின் பணிப்புரையால்

## தற்காலிகமாக பதவி துறந்தார் நிமல்


விமான சேவைகள் அமைச்சுக்கும் தனியார் நிறுவனமொன்றுக்கும் இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்த வேண்டும் எனவும், ஆகவே விமான சேவைகள் அமைச்சர் பதவியில் இருந்து தற்காலிகமாக விலக வேண்டும் எனவும் ஜனாதிபதி விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைய அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா அமைச்சுப்பதவியில் இருந்து விளக்கியுள்ளார்.

விமான சேவைகள் அமைச்சு தனியார் நிறுவனம் ஒன்றுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்

தொடர்ச்சி P12



## 3,263 டெங்கு நோயாளர்கள்



நாடளாவிய ரீதியில் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருகின்ற நிலையில் கடந்த வாரத்தில் நாட்டில் 3,263 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P12

நெருக்கடிக்குள் தள்ளியோரை விசாரிக்க கோரும் மனுக்கள்

## ஐவரடங்கிய குழாம் முன் பரிசீலனை



நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் எதிராக கடுமையான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றம், நேற்று (06) தீர்மானித்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான

தொடர்ச்சி P12


ஐ.எம்.எப்பின் முன்மொழிவுகளுக்கு அமைய

## புதிய பட்ஜெட் தயாரிக்கப்படும்

### ஹன்னா சிங்கரிடம் பீரிஸ் தெரிவிப்பு

இலங்கையில் கடனை நிலை நிறுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்தால் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, அரசாங்கம் புதிய வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர்-ஹம்டியிடம் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கர்-ஹம்டியை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சந்தித்து



கலந்துரையாடியுள்ளார். இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள்

தொடர்ச்சி P12

## பதவி எந்நேரத்திலும் பறிக்கப்படலாம்

■ பா.நிரோஸ்

அரசாங்கம் கொண்டுவரவுள்ள 22ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை எந்த நேரத்திலும்

தொடர்ச்சி P12



## ‘மிஸ்டர் பீன்’ போன்று செயற்பட வேண்டாம்

### ரணிலை விமர்சித்தார் விஜித



■ பா.நிரோஸ்

நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க அதிகாரத்திற்கு வந்ததாக கூறும் ரணில், பொறுப்புள்ள பிரதமராக மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதை மக்களுக்கு தெரிவிக்கவேண்டும். மாறாக ‘மிஸ்ட பீன்’ போன்று செயற்பட வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் விஜித ஹேரத் பிரதமரை நோக்கி சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) பிரதமரிடமான கேள்வி நேரத்தின் போது விஜித்த ஹேரத் எம்.பி. நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். அத்துடன் எதிர்வரும் 23ஆம் திகதி எரிபொருள் கப்பல் வருவதாக அமைச்சர்கள் இந்த சபையில் தெரிவித்திருந்தனர். ஆனால் தற்போது அந்த கப்பல் வருவது தொடர்பில் எந்த நம்பிக்கையும் இல்லை. அதனால் பாராளுமன்றத்தை பிழையாக வழிநடத்திய அமைச்சர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன என கேட்டார். இதற்கு பதிலளித்த பிரதமர், அரசாங்கத்தை பொறுப்பேற்கின்றீர்களா இல்லையா என்பதற்கு மாத்திரம் பதில்கூறுங்கள். உங்களின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பொறுப்பேற்பதில்லை என தெரிவித்தார். நீங்கள் பொறுப்பேற்பதாக கூறினீர்கள். இந்த இரண்டில் ஒன்றை கூறுங்கள் என்றார்.

தொடர்ச்சி P12

## எதிர்பார்ப்புகளே பறக்க தாமதம்

### அமைச்சர் டக்ளஸ் விளக்கம்



பலாலி விமான நிலையத்திற்கான விமான சேவைகளை நடத்துவதற்கு முன்வந்திருந்த தனியார் நிறுவனத்தின் வருமானம் தொடர்பான எதிர்பார்ப்புக்களே, திட்டமிட்டவாறு குறித்த விமான சேவைகள் ஆரம்பிக்கப்படாமைக்கு காரணம் என்று தெரியவருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், இதுதொடர்பாக மனம் வருந்துவதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், பலாலி - திருச்சி, சென்னை விமான நிலையங்களுக்கு இடையில் விமான சேவையை ஆரம்பிப்பதற்கு தன்னாலான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# நான் ரெடி

“06 மாதங்கள் போன்ற குறுகிய காலத்திற்குள், பொருளாதார நெருக்கடிக்கான முதன்மைக் காரணங்களைச் சரிசெய்து நாட்டை ஸ்திரப்படுத்த முடியும். அதன்பிறகு பொதுத் தேர்தலை நடத்தி, பொதுமக்களின் ஆணையுடன் புதிய அரசை நியமிக்க வேண்டும்,'' என்றார்.

புதிய அரசாங்கத்திற்கு மாத்திரமே பொருளாதார நெருக்கடியின் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென அனுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

" பதவிகளை அல்லது தனிநபர்களை மாற்றுவதன் மூலம் இந்த நெருக்கடிகளைத் தீர்க்க முடியாது, குறிப்பாக மக்களின் நம்பிக்கையை இழந்த அரசாங்கத்தின் மூலம் தீர்க்கவே முடியாது “ என்றும் அவர் மேலும் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் திஸாநாயக்க தனது பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிப்பதற்காக பதவி விலகுவதற்கு தயாராக இருப்பதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05)தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் வினவியபோது, அந்த பணியை முன்னெடுக்க தயார். எவ்வாறாயினும், சவாலை ஏற்றுக்கொண்டு தனது நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டுமாயின் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்றார்.

# பதவி துற

வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் அச்சமில்லாது வந்து போக முடியும். ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு இரட்டை விசா உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இப்போது கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுத்தாக வேண்டும். நிதி அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க விளையாடும் விளையாட்டை இத்துடன் நிறுத்துக்கொள்ள வேண்டும். நாட்டின் நிதி நிருவாகம் குறித்து அவருக்கு எந்த திட்டமும் கிடையாது. நாட்டுக்குள் டொலர் கொண்டுவரும் எந்தவொரு திட்டமும் அவரிடம் இல்லை. அதுவே இன்று நாட்டில் வெளிநாட்டு பணம் இல்லாது வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மக்களுக்கு உணவு கொடுக்க அவருக்கு தெரியவில்லை. பிரதமராக அவர் இருப்பதில் பிரச்சினை இல்லை ஆனால் அவருக்கு நிதி அமைச்சு பொருத்தமில்லை. எனவே அவர் உடனடியாக நிதி அமைச்சு பதவியில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டும். நாட்டுக்கு டொலர் வரும் வழிகளை அவரே நிறுத்துகின்றார். இதற்கு இனியும் இடமளிக்க முடியாது.

அதேபோல் போராட்டங்களை நடத்தி தீர்வு காண முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து தீர்வுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அடுத்ததாக நாம் நடத்தும் போராட்டம் நாட்டுக்கான டொலர்களை தேடும் போராட்டமாக அமைய வேண்டும் என்றார்.

# மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கும்

திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் மீனவர்களை பாதுகாக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய வாய்மூல விடைக்கான வினாவுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மீனவர்களுக்கு தேவையான எரிபொருள், ஐஸ் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீனவர்களுக்கு நாளாந்தம் தேவையான எரிபொருளை வழங்குவது தொடர்பில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இதன்படி மீன்பிடித் துறைமுகங்களின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

# ஐவரடங்கிய குழாம் முன் பரிசீலனை



எல்.டி.பி தெஹிதெனிய மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, எதிர்வரும் 27ஆம் திகதி இரண்டு அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்களையும் ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, பிரபல இலங்கை நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங் மற்றும் ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் உட்பட சிலரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தற்போதைய நிதியமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான டபிள்யூ. டி.லக்ஷ்மன் மற்றும் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, மத்திய வங்கியின் நாணயச் சபை ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நேற்றைய அமர்வின் பொது, பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள மத்திய வங்கியின் முன்னாள் அஜித் நிவார்ட் கப்ரால் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தமது சேவை பெறுநர் சார்பில் ஆட்சேபனையைத் தெரிவிக்கவுள்ளதாக மன்றில் அறிவித்தார்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர், மனுக்கள் சார்பான ஆட்சேபனையை ஆற்றுப்படுத்துமாறு பிரதிவாதிக்கு மன்று உத்தரவிட்டது.

மேலும், அதற்கு எதிர்ப்பு ஆட்சேபனை இருந்தால் 22ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று மனுதாரருக்கும் நீதிமன்றம் அறிவித்தது.

# தற்காலிகமாக பதவி துறந்தார் நிமல்



தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நேற்று முன்தினம் (05) பாராளுமன்றத்தில் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடியாக முறையான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகள் முடியும் வரை ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பதவியில் இருந்து தற்காலிகமாக விலகுவதற்கு நிமல் சிறிபால டி சில்வா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யுத்த வீரனே வெளியே வா

தற்போதைய நெருக்கடிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கமே காரணம் என்றும் அவர் பதவி விலகவேண்டும் என்றும் கோரி, நேற்றையதினம் காலை ஹிருணிக்காவுடன் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

யுத்த வீரனான கோட்டாவை வெளியே வரச் சொல்லுமாறு கோஷமிட்ட ஹிருணிக்கா, பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் பாரியளவிலான போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், எதிர்வரும் ஜூலை மாதம் 9ஆம் திகதி வரை ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே தாம் தங்கியிருக்கப்போவதாக ஹிருணிக்கா தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி மாளிக்கைக்கு தடைகளை மீறி செல்ல முயற்சித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது செத்தம் வீதியில் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

# 3263 டெங்கு நோயாளர்கள்

கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாவதாகவும், தற்போது வரையில் 1004 பேர் இவ்வாறு டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சு, கம்பஹா மாவட்டத்தில் 516 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 332 பேரும், கண்டு மாவட்டத்தில் 332 பேரும், காலி மாவட்டத்தில் 160 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 153 பேரும், கேகாலை மாவட்டத்தில் 154 பேரும் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

# புதிய பட்ஜெட் தயாரிக்கப்படும்



குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள இந்த கலந்துரையாடலின் போது, குறிப்பாக எரிபொருள், உணவு மற்றும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு தொடர்பில் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு விளக்கமளித்துள்ளார். இருதரப்பு மற்றும் பலதரப்பு நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்படும் மனிதாபிமான உதவிகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் நிறுவனங்களின் மனிதாபிமான உதவியின் தற்போதைய நிலையை வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெளிவுபடுத்தியுள்ளார். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏனைய உதவித் திட்டங்களுக்கும் மேலதிகமாக, இலங்கைக்கு ஐ.நா. வினால் வழங்கப்படும் உடனடி உதவிகளில் பெரும்போகத்திற்கான யூரியா, மருந்துப் பொருட்கள், விதைகள் மற்றும் பாடசாலைகளுக்கு உணவு வழங்கும் திட்டம் ஆகியவை உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்ததுடன், இலங்கையில் கடனை நிலைநிறுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்தால் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு அரசாங்கம் புதிய வரவு -செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# சட்டம் ஒழுங்கை பாதுகாக்க இராணுவத்திற்கு கற்பியுங்கள்

## மனித உரிமைகள் ஆணைக்குழு பாதுகாப்பு செயலாளருக்கு வலியுறுத்து

நாட்டில் நிலவும் நெருக்கடி சூழ்நிலையில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டாலும், சட்டம் ஒழுங்கை பாதுகாக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழு பாதுகாப்பு செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

அண்மையில் குருநாகல் யக்கஹாபிட்டிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற குழப்பநிலையின் போது இராணுவ அதிகாரி ஒருவரை நபர் ஒருவரை எட்டி உதைத்த சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்னவிடம் விசாரணைகளை மேற்கொண்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தை பாதுகாப்பு செயலாளர் என்ற ரீதியில் தாம் கண்டிப்பதாகவும், இது தொடர்பில் இராணுவம் உயர்மட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பாதுகாப்பு செயலாளர் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளார். இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு செயலாளர் ஆணைக்குழுவிற்கு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டாலும், சட்டம் ஒழுங்கை பாதுகாக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பாதுகாப்பு செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

# பதவி எந்நேரத்திலும் பறிக்கப்படலாம்



ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்ய முடியும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியல்ல சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அமர்வில் கலந்துகொண்டு பிரதமரின் விசேட அறிவிப்புக்கு பதிலளித்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகவே துறைசார் மேற்பார்வை குழுக்கள் முறையாக இயங்க முடியும். எனினும் 19 திருத்தச் சட்டம் இல்லாது இந்த குழுக்கான அதிகாரங்கள் வழங்கப்படாது. 21ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து குழுக்கள் அனைத்தையும் அரசியல் மயப்படுத்தி விட்டனர் எனவும் தெரிவித்தார்.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ சமர்ப்பிப்பது 19ஆவது திருத்தச் சட்டம் அல்ல. ஆரம்பத்தில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீளக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும் பின்னர் வேறு ஒரு திருத்தச் சட்டமே கொண்டுவர முயற்சிக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

இச்சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு பதிலாக அதிகரித்துள்ளனர். இதனால் எந்நேரத்திலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்க முடியும். எனினும், பிரதமர் பதவியில் இருந்து ரணிலை விலக்குவதற்கு நாம் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

டொனமூர் அரசியலமைப்பு முறைமையின் கீழ் குழுக்களை அமைக்க வேண்டும் என பிரதமர் கூறுவதற்கு தாம் இணக்கம் தெரிவிப்பதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல இதன்போது தெரிவித்தார். இதற்கு பதிலளித்த ரணில் விக்ரமசிங்க எந்தவொரு நாட்டின் அரசியலமைப்புகளிலும் துறைசார் மேற்பார்வை குழு இல்லை. எனவே இது தொடர்பில் அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்மானம் ஒன்றுக்கு வருவோம் எனவும் தெரிவித்தார்



# “மிஸ்டர் பீன்” போன்று செயற்பட வேண்டாம்

இதன்போது கருத்து தெரிவித்த விஜித்த ஹேரத் எம்.பி, மிஸ்டர் பீன் போன்று செயற்படாது பொறுப்புள்ள பிரதமராக மக்களின் பிரச்சினை தீர்ப்பதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கையை கூறுங்கள். மிஸ்டர் பீன் போன்று செயற்படுவதாக இருந்தால் எதிர்க்கட்சிக்கு வந்து அமர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் தற்போது நாட்டின் பொறுப்புமிக்க பிரதமர். அதனால் மக்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளியுங்கள் என்றார்.

# பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதிக்கே



19 ஆவது திருத்தத்திற்கும் அப்பாலான மேம்படுத்தப்பட்ட திருத்தமாகவே 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் அமையும். எனினும் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை ஜனாதிபதி வைத்திருப்பதை மாற்ற முடியாது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் விளக்கமளித்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆவது திருத்தத்திற்கும் அப்பால் சென்று மேம்படுத்தப்பட்ட திருத்தமாகவே 22 ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. குறிப்பாக 19 ஆவது திருத்தத்துக்கமைய மத்திய வங்கி ஆளுநரின் நியமனம் அரசியலமைப்பு பேரவைக்குள் இல்லை. இதனை 22 இல் நாங்கள் அந்தப் பேரவைக்குள் உள்வாங்கியுள்ளோம். அதேபோன்று 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு 3 அமைச்சுப் பதவிகளை வகிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு, சுற்றாடல், மகாவலி அமைச்சுப் பதவிகளை அவர் வகிக்கலாம். ஆனால் 22 ஆவது திருத்தத்தில் அது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சை மட்டும் வகிக்கலாம்.

எவர் என்ன கூறினாலும் எந்த காரணத்திற்காகவும் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதியிடம் இருந்து நீக்க முடியாது. 19 ஆவது திருத்தத்தில் நாட்டுக்கு பொருத்தமில்லாத விடயம் இருந்தது. தேசிய அரசாங்கத்தை அமைத்து ஒரு எம்.பி கட்சியில் இருந்தாலும் அமைச்சுப் பதவிகளை அதிகரிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது. இதனை புதிய அரசியலமைப்பு திருத்தத்தில் மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதேவேளை தற்போது பொதுஜன பெரமுனவின் 153 எம்.பிக்கள் உள்ளனர். இதனை நிறைவேற்ற வேண்டுமாயின் 150 வாக்குகள் அவசியமாகும். அதேபோன்று 21 ஆவது திருத்தம் போன்று குழப்பிக்கொள்ளவும் அவசியமில்லை. உயர்நீதிமன்றத்தால் 21 ஆவது திருத்தத்தில் பல விடயங்களை சர்வஜன வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்ற முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாக இதனையும் குழப்பிக்கொண்டு பாராளுமன்றத்தை குழப்ப நாங்கள் விரும்பவில்லை. தற்போது பிரதமர் பதவி தனியான ஆசனம் உள்ள ஒருவருக்கே வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாற்றங்கள் வேண்டுமாயின் இது தொடர்பில் கலந்துரையாட பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றார்



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com



பொதுமக்களை தாக்கும்

## இராணுவ வீரர்களுக்கு தண்டனை வழங்குங்கள்



வரிசைகளில் காத்திருக்கும் பொது மக்களை தாக்கும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக அதிகபட்ச தண்டனையை இராணுவம் வழங்க வேண்டும் என முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேக்கா எம்.பி தெரிவித்துள்ளதுடன் , பொதுமக்கள் பக்கம் ஒருபோதும் படையினர் துப்பாக்கிகளை திரும்பக் கூடாது எனவும் சபையில் தெரிவித்தார்.

நாடு நெருக்கடி நிலைமைகளுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் பாதுகாப்பு படையினர் ஒழுக்கத்தை பின்பற்ற வேண்டும். காலி கோட்டையில் நடைபெற்ற போராட்டத்துக்கு தடையை ஏற்படுத்திய இராணுவ சிப்பாய்க்கு இராணுவ தொப்பியை கூட முறையாக வைக்க தெரியவில்லை. அவர் தொப்பிக்குள் பான் இருந்ததாகவே நான் நினைத்தேன். அதுபோல குருநாகலில் இளைஞர் ஒருவரை இராணுவ அதிகாரி ஒருவர் மோசமாக தாக்கியுள்ளார். இவ்வாறு நடந்து கொள்ளும் இராணுவ வீரர்களுக்கு எதிராக அதிகபட்ச தண்டனையை வழங்க வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாகவே இராணுவம், இராணுவ தளபதி, முன்னாள் இராணுவ வீரர்களின் கௌரவம் பாதுகாக்கப்படும். பாதுகாப்பு படையினர், பொதுமக்களுக்கு எதிராக தங்களது துப்பாக்கிகளை திருப்ப கூடாது என்றார்.

அத்தியாவசிய பொருட்களுக்கு

## விரைவில் விலை நிர்ணயம்



அடுத்த சில மாதங்களில் அத்தியாவசிய பொருட்கள் இலங்கை சந்தைக்கு வழங்கப்படும். மக்களுக்கு விரைவில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொடுக்கப்படும் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார், அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு காணப்படுகின்றது. அதற்கு பல்வேறு புறக்காரணிகள் ஏதுவாக அமைந்துள்ளது. எனினும் விரைவில் விலை நிர்ணயம் ஒன்றினை முன்னெடுப்போம் என்றார்.

ரஷ்ய தூதுவர், பங்களாதேஷ் , தாய்லாந்து தூதுவர்களுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது இலங்கைக்கு தேவையான எரிபொருள், கோதுமை மா, அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்ள கலந்துரையாடப்பட்டுள்ளது. பங்களாதேஷிடம் இருந்து ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது. அதேபோல் 180 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய இந்திய அரசாங்கம் கடன் சலுகைகளை வழங்கியுள்ளது. அடுத்த இரண்டு மாதங்களில் அதற்கான பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் .அதேபோல் கோதுமை, சீனி இறக்குமதி தடையை நீக்குமாறு இந்தியாவிற்கு வலியுறுத்தியுள்ளோம். அதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது என்றார்.

அடுத்த சில மாதங்களில் அத்தியாவசிய பொருட்கள் இலங்கை சந்தைக்கு வழங்கப்படும். மக்களுக்கு விரைவில் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொடுக்கப்படும். தட்டுப்பாடு இன்றி அரிசியை பெற்றுக்கொடுக்கவும், சீனி தேவையை பூர்த்தி செய்யவும் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. சதோசை மூலமாக மக்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் பெற்றுக்கொடுக்கப்படும். எனினும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு காணப்படுகின்றது. அதற்கு பல்வேறு புறக்காரணிகள் ஏதுவாக அமைந்துள்ளது. எனினும் விரைவில் விலை நிர்ணயம் ஒன்றினை முன்னெடுப்போம் என்றார்.

## அந்நிய செலாவணி சட்டத்தை மாற்றியமைக்க அனுமதிக்க மாட்டேன்



“எனது ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட அந்நிய செலாவணி சட்டத்தாலேயே, நாட்டுக்கு அதிகளவான அந்நிய செலாவணி கிடைத்தது. அந்நிய செலாவணி சட்டத்தை மாற்றியமைக்க அனுமதிக்க மாட்டேன்” என சபையில் தெரிவித்த பிரதமர் ரணில், இப்போது சில நெருக்கடிகள் இருந்தாலும் இந்தச் சட்டம் அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில், அப்போது நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயகவால் கொண்டுவரப்பட்ட அந்நிய செலாவணி சட்டத்தில் பாரிய பிரச்சினைகள் காணப்படுவதாகவும், இந்தச் சட்டத்தை ஏன் நீக்கவில்லை, 22 ஆவது திருத்தச் சட்டத்தை விட இதுவே இப்போது முக்கியமான ஒன்றாக இருக்கிறது எனவும் வீரவன்ஸ எம்.பி சபையில் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்நிய செலாவணி தொடர்பில் காணப்பட்ட பழைய சட்டத்தால் நாட்டுக்கு பாரிய அளவில் அந்நிய செலாவணி கிடைக்கவில்லை. எனது ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட அந்நிய செலாவணி சட்டத்துக்கு பின்னர் நாட்டுக்கு அதிகளவான அந்நிய செலாவணி கிடைத்தது எனரணில் தெரிவித்தார்.

எனினும் இதனை மறுத்த விமல் வீரவன்ஸ , மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் இந்த அந்நிய செலாவணி சட்ட மூலத்தால் நாட்டுக்கு மாதமொன்று கிடைக்கும் 300 மில்லியன் டொலர் அந்நிய செலாவணி கிடைப்பதில்லை என கூறியிருக்கிறார்.

எனினும் இதனை திட்டவட்டமாக மறுத்த ரணில் விக்கிரமசிங்க, உலகில் உள்ள ஏனைய நாடுகளில் உள்ள சட்டங்களுக்கு இணையாகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இந்தச் சட்டம் காணப்படுகிறது. எவ்வாறாயினும் இந்தியா கொண்டுவரும் அனைத்து சட்டங்களையும் நாம் கொண்டு வருவது இல்லை எனவும் பிரதமர் பதிலளித்தார்.

## இரட்டைக் குடியுரிமைக் கொண்டவர்களை பாதுகாக்க ‘டீல்’



22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை எவராவது எதிர்ப்பார்களாக இருந்தால், இரட்டை குடியுரிமையை கொண்டவர்களை பாதுகாப்பதற்கே அவர்கள் இதனை எதிர்பார்கள். அதற்கான டீல் இருக்கலாம் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சபையில் தெரிவித்தார். கொண்டுவரப்படவுள்ள 22ஆவது திருத்தச் சட்டத்துக்கும் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அதிகமான ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் இருப்பதாகவும் விமல் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 21வது திருத்தச் சட்டம் மூலத்திற்கு உயர் நீதிமன்றம் வழங்கி இருந்த வியாக்கியானத்தை பாருங்கள். குறிப்பாக இச் சட்டமூலத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதாக இருந்தால், தற்போதைய ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க முடியாது. எவ்வாறாயினும் தற்போதைய ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்றால், சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஏதேனும் காரணங்களை கூறி 22 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை எவரேனும் எதிர்ப்பார்களாக இருந்தால், இரட்டை குடியுரிமை கொண்டவரை பாதுகாப்பதற்கே அவர்கள் எதிர்ப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

## கஞ்சனவின் வாக்குறுதியில் நம்பிக்கையில்லை



எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, எரிபொருள் கப்பல்கள் வரும் தினங்கள் தொடர்பில் வெளியிடும் தகவல்கள் மீது நம்பிக்கை கொள்ளமுடியாது என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) பிரதமர் இடத்திலான கேள்வியின் போது உரையாற்றுகையிலேயே விஜித ஹேரத் இதனை கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் மனுஷ நாணயக்காரவும் ஹரீன் பெர்னாண்டோவும் எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் 5 எரிபொருள் கப்பல்கள் வருமென்று கூறியிருந்தனர். ஆனால் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அப்படி இல்லை 13 ஆம் திகதிக்கே கப்பல் வர இருந்தது; அதுவும் நிச்சயமில்லை என்று கூறியுள்ளார். உரக் கப்பல் தொடர்பில் கூறினார். அந்தக் கப்பலும் வரவில்லை. எரிபொருள் கப்பல் தொடர்பில் கூறினாலும் அதுவும் நிச்சயமில்லை. அதேபோன்று எரிவாயு வருகின்றது. 3,500 மெற்றிக் தொன் எரிவாயுவே வரும். அது இரண்டரை நாளுக்கே போதுமானது.

இதேவேளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டோக்கன் முறை இல்லை என்று அமைச்சர் கூறினாலும் அந்த முறையே இருக்கின்றது.

இவ்வாறான நிலைமையில் கடந்த 23 ஆம் திகதி கப்பல் வரும் என்று அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் அப்போது கப்பல் வரவில்லை. முன்னர் அதற்கான நாணயக் கடிதம் திறக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் கப்பல் வரவில்லை. அப்படியென்றால் இது முற்றிலும் பொய்யே. இதனால் எதிர்வரும் 13 ஆம் திகதி வரும் கப்பல் தொடர்பான கருத்தும் நம்ப முடியாததாகவே உள்ளது.

## அப்போது மறுத்த மைத்திரியால் இப்போது முடியுமா?

### ரணில் கேள்வி

பா.நிரோஸ்

கடந்த ஆட்சிக் காலத்தின் போது ரஞ்சித் மத்தும பண்டார, சரத் பொன்சேக்காவுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு மறுத்த மைத்திரிபால சிறிசேனவால், தற்போது எப்படி கூட்டணி ஒன்றை அமைத்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசாங்கத்தை அமைக்க முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் கேள்வி எழுப்பினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி புதிய அரசாங்கம் ஒன்றே அமைக்க முயல்கிறது. எனினும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியால் கடந்த காலத்தில் 52 நாள்கள் மாத்திரமே அரசாங்கம் ஒன்றை அமைக்க முடிந்தது. கடந்த ஆட்சிக்காலத்தின் போது சரத் பொன்சேகாவுக்கு அமைச்சர் பதவி ஒன்றை வழங்க வேண்டும் என அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நான் கேட்டிருந்தேன். எனினும் அதனை மைத்திரி மறுத்தார்.

அதுபோல ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு பொலிஸ் அமைச்சை வழங்க வேண்டும் என நாம் கேட்டதற்கும் மைத்திரி மறுத்தார். இவ்வாறான நிலையில் தற்போது எப்படி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியால் அரசாங்கம் அமைக்க முடியும் எனவும் ரணில் கேள்வி எழுப்பினார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் தமிழ்Mirror
பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள் பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX

கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக

# இன்று வேலை நிறுத்தம்

நூருல் ஹுதா உமர்

கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் இன்று (07) வேலை நிறுத்த போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபை நிர்வாகத்தால் ஊழியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்ற கெடுபிடிகளை ஆட்சேபித்து இவ்வாறு வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக, மேற்படி தொழிற்சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் உயர் பீடம் கல்முனையில் உள்ள தலைமையகத்தில் அண்மையில் கூடி இத்தீர்மானத்தை எடுத்தது என்றும் தெரிவித்த அவர், இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் அறிய தந்தார்.

அதனடிப்படையில், அத்தியாவசிய சேவைகள் வழங்குநர்களாக ஊடகவியலாளர்கள், நீர் வழங்கல் வடிகால் சபையினர் ஆகியோரையும் பிரகடனப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில்



எரிபொருள் உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும். உரிய மாவட்ட அரசாங்க அதிபர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்தந்த பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பதவிக் காலம் முடிவடைந்த பின்னரும் மேலும் ஒரு வருடத்துக்கு உள்ளூராட்சி சபைகளின் காலம் நீடிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் பல கோடி ரூபாய் வரிப் பணம் விரயம் செய்யப்படுகிறது.

இதை தவிர்ப்பதற்காக இச்சபைகளுக்கு விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

பெற்றோல் திருட்டின்போது

# திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

## வீட்டாரை எழுப்பி, திருடன் தப்பியோட்டம்



எச்.எம்.எம்.பர்ஸான்

வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து பெற்றோலை திருடிய போது, திடீரென மோட்டார் சைக்கிள் தீப்பற்றியமையால் குறித்த வீட்டாரை நித்திரையில் இருந்து எழுப்பிவிட்டு திருடன் தப்பியோடிய சம்பவமொன்று பதிவாகியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - 01 சீனிப்போடியார் வீதியிலுள்ள வீடொன்றிலேயே நேற்று முன்தினம் (05) அதிகாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டு முன்றலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்த பெற்றோலை திருடன் திருடும் போது, வெளிச்சத்தை ஏற்படுத்த லைட்டரை பயன்படுத்திய போது மோட்டார் சைக்கிள் தீப்பற்றியுள்ளதுடன், வீட்டின் கூரை, கதவு மற்றும் ஜன்னல்கலும் தீப்பற்றி எரிந்துள்ளன.

இவ்வாறு தீப்பற்றிய போது, “மோட்டார் சைக்கிள் எரிகிறது எழும்புங்கள்” என்று கூக்குரல் ஒன்று கேட்டவுடன் தாம் எழுந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் தீப்பற்றிய போது அதனை அணைப்பதற்காக திருடன் தண்ணீர் என்று நினைத்து, வாளி ஒன்றில் இருந்த பெயின்ட் பூசும் டின்னரை மோட்டார் சைக்கிளில் ஊற்றியதால் மோட்டார் சைக்கிள் வேகமாக தீப்பற்றியுள்ளதாக பொலிஸார் ஆராய்ந்ததில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தையடுத்து தப்பியோடியுள்ள திருடனை கைதுசெய்ய நடவடிக்கையை முன்னெடுத்துள்ள வாழைச்சேனை பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காட்டு யானையால் உடமைகள் சேதம்

## அதிகாரிகள் வரவில்லை

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நள்ளிரவில் காட்டு யானையால் வீட்டு உடமைகள் சேதமாக்கப்பட்டு, நாம் தெய்வாதீனமாக உயிர் தப்பினோம். ஆயினும், இது பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்தும் எவரும் வந்து பார்வையிடவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பஸ்தரான நாகலிங்கம் சத்தியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - பதுளை வீதியை அண்டியுள்ள கோப்பாவெளி எனும் கிராமத்திலுள்ள சத்தியநாதனின் வீடு கடந்த சனிக்கிழமை (02) நள்ளிரவில் கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானையால் சேதமாக்கப்பட்டதாக அவர் தெரிவிக்கிறார்.

சம்பவம் நடந்து பல நாள்கள் கடந்துவிட்ட போதிலும் பொலிஸாரோ, வன ஜீவராசி அலுவலர்களோ பிரதேச செயலக அதிகாரிகளோ எவரும் வந்து பார்வையிடவில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார். இதற்கு தற்போதைய எரிபொருள் நெருக்கடியே காரணம் என்றும் தெரிவிக்க ப்பட்டிருக்கின்றது.



இச்சம்பவம் இடம்பெற்றபோது தமது குடும்பம் காட்டு யானையின் தாக்குதலில் இருந்து காப்பாற்றிக் கொள்ள கூக்குரலிட்டதும் உதவிக்கு விரைந்த அயலவர்களின் உதவியுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பிப் பிழைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கோப்பாவெளி, கித்துள், பெரியபுல்லுமலை கிராமங்களில் தற்போது காட்டு யானைகள் ஊடுருவுதல் வழமையான ஒரு நிகழ்வாக மாறிவிட்டிருப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 26ஆம் திகதி கித்துள் பிரதேசத்தில் மாட்டுப் பண்ணை உள்ள இடத்துக்குச் சென்ற கூலித் தொழிலாளி மீது காட்டு யானை தாக்கியதில் அவர் ஒரு காலை இழந்துள்ளார்.

328 பயனாளிகளுக்கு

# தமிழ் நாட்டு அரசின் உதவி

தீஷான் அஹமட்

இந்தியாவின் தமிழ் நாட்டு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரிசிப் பொதிகள், மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அல்லைநகர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள 188 பேருக்கும், பாரதிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 140 பயனாளிகளுக்குமாக மொத்தம் 328 பயனாளிகளுக்கு, நேற்று (06) பகிர்ந்தளிக்கப்பட்டன.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எ. முபாறக் தலைமையில் இப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மூதூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல்



பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

மூதூரிலுள்ள 42 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 6,250 பயனாளிகளுக்கு அந்தந்த கிராமங்களில் வைத்து இவ் அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

சமுர்த்தி

# உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

ஏ.எச்.ஏ. ஹுஸைன், எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றும் வங்கி முகாமையாளர்கள், வங்கி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நேற்றிலிருந்து (06) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக அரச அலுவலக கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் தமது பணிகளை முன்னெடுப்பதில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, தமக்கான எரிபொருளை வழங்குமாறு கோரி, வங்கிகள் அனைத்தையும் மூடி பணிப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அலுவலக கடமைகளுக்குச் செல்லும் தமக்கும் எரிபொருளை வழங்காத பட்சத்தில் தொடர்




பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றும் வங்கி முகாமையாளர்கள், வங்கி அலுவலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

# குருதி தட்டுப்பாடு

## மன்னார் மக்களிடம் அவசர கோரிக்கை

எஸ்.றொசேரியன் லெம்பெட்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நாளை வெள்ளிக்கிழமை (08) காலை இரத்த வங்கியில் விசேட இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் செந்தூர் பதிராஜா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குருதி




தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மேற்படி இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக O+ மற்றும் B+ வகை குருதிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் இதில் கலந்துகொண்டு இரத்த தானம் செய்து கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு, மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் செந்தூர் பதிராஜா அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளார்.



# செம்மணியில் நடந்த திருட்டு

நிதர்சன் வினோத்

யாழ்.கல்வியங்காடு - புதிய செம்மணி வீதியிலுள்ள வீடொன்றுக்குள் நள்ளிரவில் நுழைந்து மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடிய கும்பல், அங்கிருந்த சைக்கிள் ஒன்றையும் திருடிக்கொண்டு தப்பி சென்றுள்ளது.

குறித்த சம்பவம், நேற்று முன்தினம் (05) இரவு இடம்பெற்ற நிலையில், நேற்று (06) காலை வீட்டிலுள்ளவர்கள் சைக்கிளைக் காணவில்லை எனத் தேடிய போது மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலும் திருடப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

# யாழில் எரிபொருள் விநியோகம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தால் 6,600 லீட்டர் பெற்றோல் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக பொதுமக்களுக்கு 72% மற்றும், அரச உத்தியோகத்தர்களுக்கு 28% எரிபொருள் வழங்கப்பட்டதாக நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் வைத்திலிங்கம் சிவராசா ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார்.

பல நாள்களாக எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக காத்திருந்த அனைவருக்கும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் மற்றும் இராணுவம், பொலிஸாரின் உதவியுடன் மக்களுக்கு விநியோகித்ததாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, காத்திருந்த மக்களுக்கு தாகசாந்தி நிலையம் அமைத்து இராணுவம், பொலிஸார் குளிர்பானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.




# மக்களை மிரட்டும் கரடி; பலர் படுகாயம்

லெம்பர்ட்

மன்னார் மாவட்டத்தில் உள்ள வட்டுப்பித்தான் மடு, நானாட்டான், வங்காலை போன்ற பகுதிகளில் கரடியின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையில், பலர் கரடி கடிக்கு இலக்காகியுள்ளனர். அதில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரடியை பிடிக்குமாறு வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு பொதுமக்கள் அறிவித்த போதும் எரிபொருள் பிரச்சினை காரணமாக அங்கு வருதைதர முடியாது உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் கரடி நுழைவதாகவும், அதிகாலை நேரங்களில் மக்களை தாக்குவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கான எரிபொருளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு, கரடியை பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# டிப்பரில் இளைஞர்கள் மூவர் கடத்தல்

சுப்பிரணியம் பாஸ்கரன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட கோம்பாவில், வள்ளிபுனம், தேரவில் பகுதிகளை சேர்ந்த மூன்று இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களை டிப்பரில் கடத்திச் சென்று கடுமையாக தாக்குதல் நடத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது கல்லாற்று பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை தாக்கியதாக தெரிவிக்கப்படும் மூன்று இளைஞர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (05) மாலை இளைஞர் குழு ஒன்று டிப்பரில் மூன்று இளைஞர்களையும் கடத்தி சென்ற வேளை, விசுவமடு பகுதியில் பாலத்தில் மோதி டிப்பரின் டயர் வெடித்துள்ளது.

இதைத் தொடர்ந்து டிப்பர் வாகனத்தை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு சென்றுள்ளனர்.




இதையடுத்து சம்பவ இடத்துக்கு புதுக்குடியிருப்பு பொலிஸார் சென்ற வேளை கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் டிப்பர் வாகனத்தை விட்டு தப்பி சென்ற நிலையில், கடத்தப்பட்ட மூன்று இளைஞர்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். அவர்களை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்கள்.

டிப்பர் வாகனம் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் உரிமையாளர் தொடர்பிலும் வாகன சாரதி தொடர்பிலும் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொண்டமனாறில் நால்வர் கைது

நிதர்சன் வினோத்

தொண்டமனாறு பகுதியில் இருந்து சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் 4 பேர், நேற்று (06) அதிகாலை ஒரு மணியளவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த இருவரும் திருகோணமலையைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தொண்டமனாறு இராணுவச் சோதனைச் சாவடிக்கு அண்மையாக அதிகாலையில் நடமாடிய நால்வரையும் இராணுவத்தினர் விசாரணை நடத்திய போதே அவர்கள் படகுமூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டமை தெரியவந்தது.

படகு ஒன்றுக்கு தலா 03 இலட்சம் ரூபாய் வீதம் பணம் செலுத்தியதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



கையை விரித்தது டிப்போ

# தனியார் பஸ்கள் பல ஓடவில்லை

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன் இ.போ.ச பஸ் டிப்போ மூலம் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில், கடந்த 3 நாள்களாக எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஹட்டனிலிருந்து நாளாந்தம் குறுகிய மற்றும் நீண்ட தூர சேவைகளில் ஈடுபடும் 210 பஸ்களில் 40 பஸ்களே நேற்று (6) சேவையில் ஈடுபட்டதாகவும் அந்த பஸ்களுக்கும் உரிய முறையில் எரிபொருள் கிடைக்காவிட்டால் இன்றிலிருந்து (7) சேவையில் இருந்து விலகுவதாகவும் ஹட்டன் தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் எஸ். உதயகுமார் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் ஹட்டன் நகரின் பிரதான மற்றும் குறுக்கு வீதிகள், ரயில்வே நிலையத்துக்கு அருகில் என பல இடங்களில் கடந்த 3 நாள்களாக தனியார் பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறு நிறுத்தி வைப்பதற்காக ஹட்டன் ரயில் நிலையத்துக்கும் ஹட்டன்- டிக்கோயா நகர சபைக்கும் தினமும் 300 ரூபாய் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஹட்டன் டிப்போ முகாமையாளர் ஒருவரிடம் வினவியபோது, ஹட்டன் டிப்போவிலுள்ள பஸ்கள் சேவையில் ஈடுபடுவதற்கு மாத்திரமே எரிபொருள் கிடைத்துள்ளது என்றும் தனியார் பஸ்களுக்கான எரிபொருள் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை தனியார் பஸ்கள் சேவையிலிருந்து விலகியுள்ளமையால், நேற்றைய தினம் ஹட்டன் இ.போ.ச டிப்போ மூலம் மேலதிக இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் தட்டுப்பாட்டால்

# தேயிலைத் தொழிற்றுறை பாரிய வீழ்ச்சி

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தேயிலை உற்பத்திக்கு தேவையான எரிபொருள் கிடைக்காமை காரணமாக, தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, மேலும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக தோட்ட முதலாளிமார் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ரொசான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (5) தலவாக்கலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தேயிலைத் தோட்டங்களிலிருந்து தேயிலைத் தொழிற்சாலைகள் வரை, பறிக்கும் கொழுந்துகளைக் கொண்டு செல்வதற்கும் தேயிலைத் தூள் தயாரிப்புக்கும் தினமும்



அதிகளவு பெற்றோலும் டீசலும் தேவைப்படுகின்றன.

அத்துடன் தற்போது அமல்படுத்தப்படும் மின்துண்டிப்புக்கு மத்தியில் தேயிலை உற்பத்திக்கு பாரியளவு எரிபொருள் தேவையாகவுள்ள நிலையில், தேயிலைத் தூளை ஏல விற்பனைக்கு கொண்டு செல்வதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் தேயிலைத் தொழிற்றுறையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 இலட்சம் பேர் தொடர்புட்டுள்ளதாகவும் இவ்வாறான நிலையில் தேயிலை தொழிற்றுறை வீழ்ச்சியடைந்தால், இலங்கையின் பிரதான அந்நிய செலாவணி கிடைக்கும் மார்க்கமும் தடைப்படுவதுடன் பத்து இலட்ச பேரின் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்படும்.

இலங்கையிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளின் கேள்விக்கு அமைய தேயிலையை ஏற்றுமதி செய்யாவிட்டால் குறித்த நாடுகள் இந்தியா மற்றும் கென்யா போன்ற நாடுகளிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்ய தொடங்கிவிடும்.

எனவே இலங்கை எரிபொருள் கூட்டுதாபனம் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு தேவையான எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள அவர், பெருந்தோட்டங்களில் எரிபொருளை சேமித்து வைப்பதற்கான களஞ்சியசாலை வசதிகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தற்போதைய நிலையில், பல தோட்டங்கள் தேயிலை உற்பத்தியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளதாகவும் தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் பெரும்பாலான தொழிலாளர்கள் தமது தோட்டத் தொழில்களை கைவிட்டு வெளிநாடு செல்வதாகவும் இதனால் தேயிலைத் தொழிற்றுறையில் குறைந்தளவு தொழிலாளர்களே பணிகளில் ஈடுபடுகின்றனர். இதுவும் தேயிலைத் தொழிற்றுறையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைவதாகவும் தோட்ட முதலாளிமார் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ரொசான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

விறகு சேகரிக்கச் சென்றவர்

# சடலமாக மீட்பு

■ ராமு தனராஜா



பல்லகெடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இந்துகலை மேற்பிரிவில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (6) காலை விறகு சேகரிக்கச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே (வயது 68 ) இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுக் காலை விறகு சேகரிக்கச் சென்ற வேளையில் திடீரென மரணமடைந்துள்ள நிலையில், தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் சடலத்தை கண்டு பல்லகெடுவ பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சதொசவில் குவியும் நுகர்வோர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன் சதொச விற்பனை கிளை மூலம் பல அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், அப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு நேற்று (5) அதிகமான நுகர்வோர் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

இதற்கமைய, வெள்ளை அரிசி ஒரு கிலோ கிராம் 210 ரூபாய்க்கும் சிவப்பரிசி 210 ரூபாய்க்கும் நாடு அரிசி- 200 ரூபாய்க்கும் சீனி ஒரு கிலோ கிராம் 280 ரூபாய்க்கும் கோதுமை மா ஒரு கிலோ கிராம் 250 ரூபாய்க்கும் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டது.

இவ்வாறு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் அதிகமானவர்கள் ஹட்டன் சதொச விற்பனை நிலையத்துக்குச் செல்வதுடன், அனைவருக்கும் மட்டுப்படுத்தல்களின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க சதொச விற்பனை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பெருந்தோட்டங்களிலுள்ள தரிசு நிலங்களை

# தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளியுங்கள்

## முன்னாள் எம்.பி கோரிக்கை

■ ஆ.புவியரசன்

பெந்தோட்டங்களில் காணப்படும் ஆயிரக்கணக்கான தரிசு நிலங்களில் விவசாயத்திற்கு உகந்தவற்றை உடனடியாக தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து, அவர்களுக்கு விவசாயம் செய்ய வழிவிட வேண்டுமென பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா முக்கியஸ்தருமான டி.வி.சென்னன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்;

தோட்டத் தொழிலாளர்களுக்கு தரிசு நிலங்களை பகிர்ந்தளிக்க கம்பனி நிர்வாகங்கள் தொடர்ந்தும் தயக்கம் காட்டி வருவதுடன், தரிசு நிலங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முனையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக அழுத்தங்களைப் பிரயோகித்து சட்ட நடவடிக்கைக்கைகளை மேற்கொண்டும் வருகின்றன.

தோட்டங்களில் காணப்படும் தரிசு நிலங்களில் இராணுவ முகாம் உட்பட ஏனைய அரச சார்பான நிர்மாணப் பணிகளை அமைக்க அனுமதி வழங்கும் கம்பனி நிர்வாகங்கள், நாட்டின் அந்நிய செலாவணிக்கு முதுகெலும்பாக விளங்கிவரும் தொழிலாளர்கள் விடயத்தில் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயற்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும்.

எனவே, ஓரிரு மாதங்களில் ஏற்பட போகும் தீவிர பொருளாதார இடர்நிலையில் இருந்து ஓரளவாவது மலையக மக்கள் விடுபட அவர்களது, விவசாய நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக தரிசு நிலங்களை தாமதியாது பகிர்ந்தளிக்க வேண்டும்.

இந்நடவடிக்கைக்காக அனைவரும் பேதங்களை மறந்து ஒன்றுபட்டு குரல்கொடுத்து கம்பனி நிர்வாகங்களை பணிய வைக்க வேண்டும் என்றார்.

லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு

# புதிய வைத்திய அதிகாரி நியமனம்

■ துவாரகஷான்



லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரியாக ஆறுமுகம் ஜெயராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி லிந்துலை பொது சுகாதார வைத்திய அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஆறுமுகம் ஜெயராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் கடந்த வருடகாலமாக வைத்திய அதிகாரியாகவும் லிந்துலை பொது சுகாதார காரியாலயத்தில் வைத்திய அதிகாரியாகவும் கடமை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

மரம் முறிந்து விழுந்ததால்

# பெண் படுகாயம்

■ சுரேஸ்குமார்



வெளிமடை, டயரபா மேற்பிரிவு தோட்டத்தில் பாரிய மரமொன்றின் கிளை முறிந்து தோட்ட குடியிருப்பில் விழுந்ததில் வீடொன்று முற்றாக சேதமடைந்துள்ளதுடன், அவ்வீட்டிலிருந்த பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

நேற்று முன்தினம் (05) இரவு வீசிய கடுங் காற்றுடன் கூடிய சீரற்ற வானிலை காரணமாகவே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குடியிருப்புக்கு ஆபத்தாக இருந்த அந்த மரம் தொடர்பில், தோட்ட நிர்வாகத்திடம் பல மாதங்களாக, வெட்டுவதற்காக அனுமதி கேட்ட போதிலும் தோட்ட நிர்வாகம் அனுமதி வழங்கவில்லையென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆபத்தான நேரத்தில் உதவிய

# பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி

■ கேதீஸ்



லிந்துலை எல்ஜின் பகுதிக்கு சென்று கொண்டிருந்த பஸ்ஸின் மிதி பலகையில் பயணித்த நபர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல பொது சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் உதவிய சம்பவம் அண்மையில் லிந்துலையில் பதிவானது. காயமடைந்த நபரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு எந்த விதமான வாகன வசதிகள் இல்லாத நிலையில் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட்ட லிந்துலை பிரதேசத்திற்கு பொறுப்பான பொது சுகாதார வைத்திய அதிகாரி ரெய்ஷினி துரைராஜாவின் மகத்தான சேவையை அப்பகுதி மக்கள் பாராட்டுகின்றனர்.

குறித்த வைத்திய அதிகாரி, தனது மேல் அதிகாரிக்கு அறிவித்துவிட்டு அலுவலக வாகனத்தில் அவரை உடனடியாக லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

எரிபொருள் பிரச்சினையால்

# நுவரெலியாவில் மரக்கறிகள் தேங்கின

■ நிலமேகம் பிரசாந்த்

எரிபொருள் தட்டுப்பாட்டால் நுவரெலியா மரக்கறி விநியோகம் பாதிப்படைந்துள்ளதாக மரக்கறி ஏற்றுமதியாளர்களும் விவசாயிகளும் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிவிக்கையில், மரக்கரிகள் நுவரெலியா பகுதியிலிருந்து கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கு விநியோகிக்கப்படும் நிலையில், நாட்டில் எரிபொருள் தட்டுபாடு நிலவுவதால், வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமாத்திரமின்றி விவசாய தோட்டங்களில் இருந்து பெறப்பட்ட மரக்கறிகள் வாகனங்களிலேயே கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்நிலை தொடருமானால் மரக்கறிகள் பாழுதடைந்து விடும். அதேபோல விவசாயத்தை நம்பியுள்ள விவசாயிகளின் நிலையும் மிக பாதிப்புக்கு உள்ளாகுமென நுவரெலியா விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே விவசாயத்தை அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் உள்வாங்கி எரிபொருளை வழங்க முன்வர வேண்டும் என நுவரெலியா விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



# மரம் சாய்ந்ததால் மின்சாரம் துண்டிப்பு

■ பி.கேதீஸ்

நுவரெலியா ஹைபொரஸ்ட் இலக்கம் 1 தோட்டத்தில், செவ்வாய்க்கிழமை (5) இரவு வீசிய கடும் காற்றினால் ஹைபொரஸ்ட் தோட்ட காளி கோவிலுக்கு அருகாமையிலிருந்த பழைமை வாய்ந்த மரமொன்று வேரோடு சாய்ந்து வீழ்ந்துள்ளது.

அந்த மரத்தின் கிளைகள் மின்சாரக் கம்பத்தில் விழுந்து மின்சார கம்பிகள் அறுந்துவிட்டன. இதனால், அப்பிரதேசத்தில் அன்றிரவிலிருந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மரம் வேரோடு சாய்ந்தமையால் பாரிய பாதிப்புகள் ஏற்படவில்லையென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கைகளில் தோட்ட நிர்வாகமும் ஹைபொரஸ்ட் பொலிஸாரும் முன்னெடுத்து வருகின்றனர்.

50 கோழிகளைத் திருடிய

# கோழித் திருடனுக்கு விளக்கமறியல்

■ எஸ். யோகா

கம்பளை, மேரிவலை கீழ் பிரிவில் உள்ள கோழிப் பண்ணையிலிருந்து கோழிகள் திருடப்பட்டுள்ளன.

இந்தப் பண்ணையிலிருந்து சுமார் 50 கோழிகள் திருட்டு போயுள்ளதாக பண்ணை உரிமையாளர் குறுந்துவத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளையடுத்து, சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு திருடப்பட்ட கோழிகள் அதே தோட்ட மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

ஒரு கிலோ கோழி இறைச்சி 1,100- 1,200 ரூபாய்க்கு விற்பனை செய்யும் நிலையில், சந்தேகநபர்கள் திருடிய கோழிகளை 800 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று (6) கம்பளை நீதிமன்றத்தின் ஆஜர் செய்தபோது, அவரை 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



# பதுக்கி வைத்திருந்து பற்றியெரியும் விலைகளுக்கு விற்காதீர்கள்

ஜனாதிபதி கோட்டா-மஹிந்த அரசாங்கத்துக்குப் பின்னர், கோட்டா-ரணில் அரசாங்கத்தை தூற்றாதவர்கள் இருக்கவே மாட்டார்கள். சிறியவர்கள் கூட, "கோட்டா கோ ஹோம்" என்ற கோஷத்தை ஏதோவொரு பாடல் போல முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு மக்களிடத்தில் கடுமையான வெறுப்பை சம்பாதித்துள்ளது இந்த அரசாங்கம்.

"இல்லை", "இல்லை" என்பதை ஒரு தாரக மந்திரமாகவே பலரும் வைத்திருக்கின்றனர். எதனைக் கேட்டாலும் இல்லை, இதில், எரிபொருட்களை அவ்வப்போது காணக் கிடைக்கிறது. சமையல் எரிவாயு கிடைப்பதே இல்லை. அந்தளவுக்கு தட்டுப்பாடுகள் நிலவுகின்றன. எனினும், ஒன்றுக்காக காத்திருக்காமல் பலரும் மாற்றீடுகளுக்கு மாறிவிட்டனர்.

ஏன் சீனி இல்லை, ஏன் பால்மா இல்லை, ஏன் பிஸ்கட்டுகள் இல்லை? எனக் கேட்டால் அக்கிராசனத்தில் அமர்ந்திருப்பவரை நேரடியாகவே சுட்டிக்காட்டி, சிறார்கள் தூற்றுமளவுக்கு இந்த அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் அமைந்துள்ளன. அதேபோல, கறுப்புச் சந்தையும் பதுக்கல் வியாபாரத்துக்கும் குறைவே இல்லை.

வரிசைகளில் நின்றிருந்து எரிபொருட்களை பெற்றுக்கொள்வதில் இருக்கும் சிரமம், வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, கண்விழித்து பல நாட்களாக காத்திருப்பவர்களுக்குத் தான் தெரியும். "முட்டையிட்ட கோழிக்குத்தான் வருத்தம்" தெரியும் என்பார்கள். அதிலிருக்கும் அர்த்தம் புரிகிறது.

எனினும், ஓடியோடி எரிபொருட்களை நிரப்பிக் கொண்டு கொள்ளை இலாபத்துக்கு விற்கும் சாதாரண சாரதிகளை நினைக்கும் போதுதான் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பிரதான நகரங்களில் ஒரு போத்தல் பெற்றோல் மூவாயிரம் ரூபாய்க்கும், 3,500 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலைகளுக்கு கறுப்புச் சந்தையில் விற்கப்படுகின்றது.

வாங்கியவருக்கும் விற்றவருக்கு மட்டுமே அந்த போத்தலின் அளவு தெரியும். ஒரு லீற்றரெனக் கூறி, ஒரு போத்தல் அளவுக்கு அல்லது அதனைவிடவும் குறைந்த அளவில் விற்கப்பட்டதாக, வாங்கி ஏமாந்தவர்கள் கதை கூறுவார்கள். பெருநகரங்களுக்கு வெளியே, 2,500 ரூபாய்க்கும் 3 ஆயிரம் ரூபாய்க்கும் கறுப்புச் சந்தையில் விற்கப்படுகின்றது.

இது பண்டிகைக் காலமல்ல, நெருக்கடியான காலமென அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்யும் முதலாளிமார்களைத் தூற்றியிருக்கின்றோம். எனினும், சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இவ்வாறு கொள்ளை இலாபத்தில் விற்று, மற்றையவர்களின் வயிற்று எரிச்சலுக்கு பலரும் உள்ளாகியுள்ளனர்.

ஒரு காலத்தில் ஓட்டோ என்றாலே மக்களின் தோழன், ஏழைகளின் சொகுசு வண்டி என்றெல்லாம் கூறி, சாரதிகளையும் போற்றுவர். அந்த நிலைமை மாறிவிட்டது. வரிசைகளில் நின்று பெற்றோலை பெற்றுக்கொள்ளும் ஓட்டோக்கள் வீதிகளில் ஓடினாலேயே, பாரிய வாகன நெரிசல்கள் ஏற்படுமென பலரும் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்தளவு எண்ணிக்கை ஓட்டோக்கள் வரிசைகளில் நின்கின்றன.

மக்கள் அனைவருமே ஏதோவொரு வகையில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் வயிறு பற்றியெரியும் வகையில் எந்தப் பொருட்களையும் விற்காதீர்கள் என்பதே எமது கோரிக்கையாகும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

காதல் வெட்கம் அடையாது. தன்னை மறந்த நிலையில் வெட்கம் எப்படி வரும்? காதலரின் கற்பனைக் கோட்டைக்கு எந்தக் கவிஞனாலும் ஈடுகொடுக்க முடியாது.

இரவு, பகல் வித்தியாசமே உணராமல், எந்த நொடியிலும் ஒரே விதமான கிளுகிளுப்புடனும் புதுவித அனுபவங்களுடனும் எண்ணக் குவியல்களுடனும் அமிழ்ந்துவிடுவது காதலர் குணம்.

தன்னைக் கட்டுப்படுத்தாத அல்லது கட்டுப்படுத்தவிரும்பாத எவர் கேட்டாலும் செவிக்குப் பூட்டுப்போடுவது, தன்னை நிறுத்தாத புதுவித இன்பநிலைப் போராட்டம். இவர்கள் தங்களுடன் மட்டுமே உரைகளை நெஞ்சத்துக்குள் பரிமாறிக் கொண்டிருப்பார்கள்.

காற்றோடும் சந்திரசூரியர்களுடனும் பட்சிகள், செடிகொடிகள் போன்றவற்றுடன் மட்டும் கருத்துப்பரிமாற்றங்களை வைத்துக்கொண்டு, தனிமையில் இதழை விரித்து புன்னகைப்பார்கள்.

காதலன், காதலி குரல் மட்டும் கேட்கும். இவர்கள், அன்பின் ஆக்கிரமிப்பில் புகுந்துகொள்வது மகாதிருப்தியாக இருக்கும். காதல் ஓர் இன்ப நோய்.

நாணமும் குறைந்து, வெளிஉலகை மறந்து, புதுஉலகோடு சங்கமிப்பார்கள். எழுத்தறிவில்லாத காதலர்களும் கவிதை வரைவார்கள். அவர்களே அதை ரசிப்பார்கள். நீண்ட வரலாற்றை எழுத்தே இல்லாமல் வரைவார்கள். காதல் தெய்வீகமானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### எரிபொருள் நிலையம் இல்லாமல்

## அவதியுறும் முசலி மக்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியில், மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முசலி பிரதேசமும் ஒன்றாகும். மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச பிரிவுகளில், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் எந்தவோர் எரிபொருள் நிலையமும் இல்லை.

மேலும், இந்தப் பிரதேச மக்கள் விவசாயம், கடல்தொழில், கூலித்தொழில் இவற்றையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுவாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறான நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால், இவர்கள் தமது தொழில்களைச் செய்ய முடியாமல் மிகவும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். நோயாளிகளை வைத்திய தேவைகளுக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லமுடியாத நிலையில், இந்த மக்கள் உள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக, முசலி பிரதேச செயலாளர் , மன்னார் மாவட்ட அரச அதிபர், ஏனைய உயர் அதிகாரிகள், பிரதேச அரசியல்வாதிகள் என அதிகார தரப்பினருக்கு முசலி மக்கள், தமது நிலை தொடர்பாகத் தெரியப்படுத்தியும், எரிபொருள் பிரச்சினை தொடர்பாக, இதுவரை எந்தவித மக்கள் நல திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லையென மக்கள் கூறுகின்றனர்.

உயர் அதிகாரிகள் விரைவாக தீர்மானம் எடுத்து, எரிபொருள் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் வேண்டுகின்றனர்.

–எ.எம். றிசாத்

# இராணுவ அதிகாரியின் தென் இலங்கை மீதான 'உதை'



புருஜோத்தமன் தங்கமயில்

எரிபொருள் நிரப்பு நிலையத்தில், இளைஞர் ஒருவரை, லெப்ரினன் கேணல் தர இராணுவ அதிகாரி ஒருவர் தாக்கிய காணொளி, கடந்த நாள்களில் வெளியானது.

பொது மக்களும் பொலிஸாரும் பார்த்திருக்கவே, குறித்த இளைஞரை இராணுவ வீரர்கள் பிடித்து இழுத்துவரும் போது, 'ப்ரீ ஸ்டைல்' குத்துச் சண்டை வீரருக்குரிய தோரணையில்தான், இராணுவ அதிகாரி காலால் தாக்கினார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில், இராணுவத்தினராலும் பொலிஸாராலும் பொது மக்கள் தாக்கப்படுவது ஒன்றும் புதிதில்லை. கடந்த சில வாரங்களாக, பல இடங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. அவற்றின் காணொளிகள், பல சமூக ஊடகங்களில் காணக்கிடைக்கின்றன.

சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தின் தலையீடு, எப்படியான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று, தென் இலங்கை மக்கள் இப்போதுதான் உணரத் தொடங்கி இருக்கின்றார்கள். வடக்கு - கிழக்கில் தொடர்ச்சியாக இராணுவ தலையீடுகளால், சிவில் நிர்வாக நடவடிக்கைகள் சீரழிந்து வந்திருக்கின்றன. அத்தோடு, மனித உரிமை மீறல்கள் என்பது, தொடர் கதைகளாகி இருக்கின்றன.

அப்போதெல்லாம், இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினரின் மனித உரிமை மீறல்களை, தென் இலங்கை மக்களில் கணிசமானவர்கள் நியாயப்படுத்தி வந்திருக்கிறார்கள். பிரித்தானியாவில் தமிழ் போராட்டக்காரர்களைப் பார்த்து, கழுத்து அறுக்கும் சைகையை காட்டிய இலங்கை இராணுவ அதிகாரியைப் பெருமைப்படுத்தும் ஓவியங்களை, தென் இலங்கையின் பல வீதிகளிலும் காண முடியும்.

முள்ளிவாய்க்கால் இறுதி மோதல்களில், இளைஞர் - யுவதிகளை நிர்வாணமாக்கி படுகொலை செய்த இராணுவத்தினரின் காணொளிகள் பல வெளியாகியிருந்தன. அந்தக் காணொளிகளை, புனையப்பட்ட காணொளிகள் என்று தென் இலங்கை மக்கள் கூறத் தலைப்பட்டார்கள். தங்களது இராணுவம், வடக்கு-கிழக்கில் மனிதாபிமான பணிகளையே மேற்கொண்டது; பயங்கரவாதிகளையே அழித்தனர் என்று திரும்பத் திரும்ப நம்பினார்கள். ஆனால், காலம் ஓர் அற்புதமான ஆசிரியர் என்பதை, தென் இலங்கை மக்கள் இப்போதுதான் உணரத் தொடங்கி இருக்கிறார்கள்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குத்துச் சண்டை வீரருக்குரிய தோரணையோடு, சாதாரண இளைஞர் ஒருவரை, இராணுவ அதிகாரி ஒருவர் தாக்குகிறார் என்றால், முள்ளிவாய்க்கால் போன்ற தளத்தில், இராணுவம் எப்படியான மனநிலையோடு தமிழ் மக்களை அணுகியிருக்கும் என்பது, இப்போதாவது விளங்கியிருக்கும்.

இல்லையென்றால், முள்ளிவாய்க்காலில் தமிழ் இளைஞர், யுவதிகள் நிர்வாணமாக்கி படுகொலை செய்யப்பட்ட காணொளிகளை புனையப்பட்டவை என்று நம்பியது மாதிரி, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவ அதிகாரியால் இளைஞர் தாக்கப்படும் காணொளியையும் புனையப்பட்டது என்று நம்ப வேண்டியிருக்கும்.

இதில், முக்கியமான விடயம் என்னவென்றால், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞர், இராணுவ அதிகாரியால் தாக்கப்படும் போது, அதை பௌத்த தேரர் ஒருவரும் பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறார். இராணுவ ஆதிக்கத்தையும் ஆளுகையையும் தொடர்ச்சியாக ஆதரித்து வருகின்ற தரப்பில், பௌத்த பீடங்கள் முக்கியமானவை.

வடக்கு - கிழக்கில் பௌத்த மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக, இராணுவம் உள்ளிட்ட முப்படையையும் கொண்டு வேலைகளை, பௌத்த பீடங்கள் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றன. அதற்கு எதிராக, தமிழ் மக்கள் அஹிம்சை வழியில் தொடர்ச்சியாக போராடி வருகின்றார்கள். அப்போது, இராணுவத்தினராலும் பொலிஸாராலும் மக்கள் தாக்கப்பட்டும், கைது செய்யப்பட்டும் வந்திருக்கிறார்கள். அதனை, ஓர் இனவாத ஆக்ரோசத்தோடு பௌத்த மேலாதிக்கவாதிகளும் அதன் துணை நிறுவனங்களும் கொண்டாடி வந்திருக்கின்றன.

ஆனால், இன்றைக்கு தம்முடைய சொந்த இன, மத மக்களையே, இராணுவமும் பொலிஸாரும் தாக்குவதைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற நிலை என்பது, காலம் கற்பிக்கின்ற பாடம்!

இராணுவத்தைப் பொறுத்தளவில், தன்னுடைய ஆணைக்குப் பணியாத அனைவருமே எதிரிகள்தான். அது சொந்த இனத்தினர், மதத்தினர், நாட்டினர் என்ற எண்ணங்கள் எல்லாம் கடந்தது. அடிப்படையில், இராணுவ மனநிலை என்பது, 'குழும மனநிலை'யில் கட்டமைக்கப்படுவது. அது, ஆயுத முனையில் கட்டிக்காக்கப்படும் போது, இன்னும் வீரியமடைகின்றது. அங்கு வன்முறையும் மனித உரிமை மீறல்களும், பிரதான கூறுகளாக மாறுகின்றன.

அதுவும், இலங்கை போன்ற இன, மத அடிப்படைவாத அரசு இயந்திரத்தின் சக்தியில் இயக்கும் இராணுவத்தின் மனநிலை என்பது, வன்முறை சார்ந்ததாகவே இருக்கும். அதனைத்தான், கடந்த 50 வருட இலங்கை இராணுவ வரலாறு காட்டியிருக்கின்றது.

> **இப்போது எரிபொருள் நிலையங்களில் பொது மக்களைத் தாக்கும் முப்படையினரும் பொலிஸாரும், விரைவில் பொதுமக்களை வீதிகளில் வைத்து தாக்கும் நிலை இயல்பான ஒன்றாக மாறிவிடும்**

தமிழ் மக்களுக்கு எதிரான மனநிலை என்பது, இராணுவத்தின் ஓர் அடிப்படை ஒழுங்கு மாதிரியே வகுக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதனால், விடுதலைப் புலிகள் மாத்திரமல்ல, தமிழ் மக்களுக்கு எதிராகவும் இராணுவம் பாரிய தாக்குதல்களை கடந்த காலங்களில், எந்தக் குற்ற உணர்ச்சியும் இல்லாமல் செய்து செய்திருக்கின்றது.

அதுபோல, அரச இயந்திரத்தின் ஏவல் படையினர்தான் தாங்கள் என்பதை, மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சிக்கு எதிராக, தென் இலங்கையில் இராணுவம் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை, அழிப்பின் போது, சிங்கள மக்கள் கண்டார்கள். ஆனாலும், சில காலத்துக்கு உள்ளேயே இராணுவத்தையும் அதன் குண இயல்புகளையும் புனிதப்படுத்தி வந்தததில், தென் இலங்கை அரசியல்வாதிகளோடு மக்களும் கணிசமான பங்கு வகித்தனர். அதனை உருவாக்கி விட்டதில், பௌத்த மேலாதிக்க தரப்புகள் ஆளுமை செலுத்தின.

இலங்கை இராணுவத்தினர் புரிந்த படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை நீதிமன்றங்களில் நீதி நிலைநாட்டப்பட்ட சந்தரப்பங்கள் மிகமிகக் குறைவு. 'அத்திபூத்தால் போல' எங்காவது நீதி நிலைநாட்டப்பட்டாலும், அதனை தென் இலங்கை இனவாத தரப்புகள் அரசியலாக்கி, வாக்குவேட்டை நடத்தியிருக்கின்றன.

2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில், மிருசுவிலில் வைத்து பால் மணம் மாறாத பிஞ்சுக் குழந்தைகள் உள்ளிட்ட எட்டுப் பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். அந்தக் கொலை வழக்கில், ஓர் இராணுவ வீரருக்கு 2015ஆம் ஆண்டு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட போது, ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட தென் இலங்கையின் இனவாதத் தரப்புகள் எல்லாமும் சேர்ந்து, அந்தக் கொலையாளிக்கு ஆதரவாக பிரசாரம் செய்து வந்தன. இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய தேர்தல் பிரசாரத்தின் போது, தான் ஜனாதிபதியானால் குறித்த கொலையாளிக்கு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்வதாக அறிவித்தார். அதனை, அவர் ஜனாதிபதியானதும் நிறைவேற்றவும் செய்தார்.

குழந்தைகளின் கழுத்தை கோடரியால் கொத்தி, படுகொலை செய்தவரை, தியாகி மாதிரி தென் இலங்கை பூராவும் பிரசாரப்படுத்தி, தங்களின் சுயநல அரசியலுக்காக, பொதுமன்னிப்பும் அளித்து விடுதலை செய்வது என்பது, அயோக்கியத்தனத்தின் உச்சம்.

இவ்வாறான செயல்கள், இராணுவத்தின் மூர்க்க குணத்தை வளர்க்கவே உதவும். அது சர்வதேச சட்டங்களுக்கு பணியாத, மனித உரிமை மீறல்களை மதிக்காத இராணுவத்தையே முன்னிறுத்தும். அது, சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்கும், ஜனநாயக பண்புகளுக்கும் அச்சுறுத்தலான ஒன்றாகவே இருக்கும்.

இலங்கை இராணுவம் உள்ளிட்ட முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளும் வன்முறை சாட்சியங்களும் பல காலமாகவே உண்டு. அவர்களைத் தண்டிக்காது, அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்காது, கொண்டாடுவது என்பது, பயங்கரமான நிலையை உருவாக்கும்.

இப்போது எரிபொருள் நிலையங்களில் பொது மக்களைத் தாக்கும் முப்படையினரும் பொலிஸாரும், விரைவில் பொதுமக்களை வீதிகளில் வைத்து தாக்கும் நிலை இயல்பான ஒன்றாக மாறிவிடும்.

# திருக்கேதீஸ்வம் கும்பாபிஷேகம்



பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வரம் கோவிலின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா, கோவில் பிரதம குரு சிவ சிறி தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் நேற்று புதன்கிழமை (06) காலை 9 மணிக்கு நடைபெற்றது.

(படங்கள்: லெம்பர்ட்)





# மஹா கும்பாபிஷேகம்

பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி தேவஸ்தான நூதன இராஜ கோபுர அஷ்டபந்தன நவகுண்டபக்ச பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவில் அண்மையில் நடைபெற்றது.









# மகளிருக்கு நிதியுதவி







முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளின் ஏற்பாட்டில், புலம்பெயர் அமைப்புகளின் நிதி உதவியில் கிராமங்களில் உள்ள மகளிர் சுயசேமிப்புக் குழுக்களை ஊக்குவிக்கும் நோக்கில், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 14 குழுக்களுக்கு தலா 25 ஆயிராம் ரூபாய் வீதம் நிதி உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில், தாய்தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச. றூபன் தலைமையில் நேற்று (06) இந்நிகழ்வு நடைபெற்றது.

நேசக்கரங்கள் அமைப்பின் கிராம மகளிர் சுயசேமிப்புக்குழுக்களுக்கான நிதி வழங்கல் திட்டத்தில், தாய்த்தமிழ்பேரவையின் ஆதரவோடு நேச்க்கரங்கள்– இங்கிலாந்து கிளை மற்றும் நேசக்கரங்கள்– கனடா கிளை, ஒன்றிணைந்த நிதிப்பங்களிப்பில் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ஊக்குவிப்பு நிதி வழங்கி வைக்கப்பட்டது.

நேச்கரங்கள் – இங்கிலாந்து கிளை கனடா கிளை இணைந்து பிரதினி சிவலிங்கத்தின் நாமத்தோடு 12 குழுக்களுக்கான ரூபாய் மூன்று இலட்சம், யாழ். சாவகச்சேரியை சேர்ந்தவரும் கனடாவில் வசித்து வந்தவருமான அமரர் கதிரவன் அரியரெட்ணத்தின் முதலாம் ஆண்டு நினைவை சுமந்து அவரது பெற்றோர் கனடாவில் வசித்துவரும் அரியரெட்ணம் குடும்பத்தின் நிதிப்பங்களிப்பாக இரண்டு குழுக்களுக்கான ஐம்பதாயிரம் ரூபாயும் வழங்கி வைக்கப்பட்டது.

(படங்கள்: செ. கீதாஞ்சன்)

# பாதயாத்திரிகர் வரவேற்பு

யாழ். கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் நேற்று முன்தினம் (05) பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த மாதம் 4ஆம் செல்வச்சன்னதி கோவிலிலிருந்து சிங்கராஜா ஜெயராஜா தலைமையில் ஆரம்பமான பாதயாத்திரை, யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு நேற்று முன்தினத்துடன் ஒரு மாத காலத்தை பூர்த்தி செய்துள்ளது.

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் ஆகியோர் விடுத்த அழைப்பை ஏற்று, அங்கு அவர்கள் விஜயம் செய்தனர்.

இதன்போது, யாழ். கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர், கல்லடி இ.கி.மிஷனில் வரவேற்கப்பட்டு, அங்கு அவர்களுக்கு மதியபோசன விருந்து உபசாரம் வழங்கப்பட்டது.

(படங்கள்: வி.ரி. சகாதேவராஜா)





# புத்தகக் கொடுப்பனவு



சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 04 அஹதியா பாடசாலைகளுக்கான காசோலை மூலமான புத்தகக் கொடுப்பனவு, சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நேற்று (06) காலை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார பிரிவின் ஏற்பாட்டில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.பர்ஹானின் ஒருங்கிணைப்பில் இக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

(படங்கள்: எம்.எஸ்.எம். ஸாகிர்)





# சேதனப் பசளை தயாரிப்பு



திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள சேதனப் பசளை தயாரிக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு, நேற்று (06) நடைபெற்றது.

பெரண்டினா நிறுவனம் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி பிரதம அதிதியாக கலந்துகொண்டு, உரிய பயனாளிகளுக்கு இதனை வழங்கி வைத்தார். விவசாயத்தை உக்குவிக்கும் முகமாக சேதன பசளை உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக, உக்கும் பொருட்களை அரைக்கும் இயந்திரம் மற்றும் பொதி செய்வதற்கான சிறிய இயந்திரப் பொதிகள் அடங்கலாக மூன்று இலட்சம் பெறுமதியான திட்டத்துக்குள் உள்வாங்கி, அவர்களுக்கு இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படங்கள்: ஹஸ்பர்)





சென்னை

# உட்கட்சி விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது

சென்னை உயர்நீதிமன்றத்தில் பழனிசாமி தரப்பு மீது பன்னீர்செல்வம் சார்பில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதி நடக்கும் பொதுக்குழு கூட்டத்துக்கு “நாங்கள் எப்படி தலையிட முடியும்” என நீதிபதிகள் கேள்வி எழுப்பி உள்ளனர். இதனையடுத்து, இன்று சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்குப் பிறகே, அ.தி.மு.க பொதுக்குழு நடக்குமா இல்லையா என்பது தெரியவரும்.

ஜூன் 23ஆம் திகதி நடந்த அ.தி.மு.க பொதுக்குழு தொடர்பாக ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக பழனிசாமி தரப்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு நேற்கு (06) விசாரணைக்கு வந்தது.

அப்போது பழனிசாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வாதாடுகையில், “நிர்வாகிகளின் ஆதரவை பன்னீர்செல்வம் இழந்துவிட்டார். நீதிமன்ற அவமதிப்பு வழக்கை நடத்தக்கூடாது என உத்தரவிட வேண்டும். ஒரு கட்சியின் உள் விவகாரங்களில் குறிப்பிட்ட எல்லை வரை தான் உயர்நீதிமன்றம் தலையிட முடியும்” என்றார்.

ஓபிஎஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “ஒருங்கிணைப்பாளர்கள் ஒப்புதல் அளிக்கும்



தீர்மானங்களை மட்டும் தான் பொதுக்குழுவில் நிறைவேற்ற முடியும். உச்சநீதிமன்ற வழக்கால் உயர்நீதிமன்ற வழக்கின் விசாரணை பாதிக்கப்பட கூடாது” என்றார்.

நீதிபதிகள் கூறுகையில், “ஒரு கட்சியின் உட்கட்சி விவகாரத்தில் தலையிட முடியாது. பொதுக்குழுவை எப்படி நடத்த வேண்டும் என நீதிமன்றம் வழிகாட்ட முடியாது. அதிமுக கட்சி விவகாரங்கள், நட்போ சண்டையோ உங்களுக்குள் நீங்களே பார்த்து கொள்ளுங்கள். நீதிமன்றத்தில் விவாதிக்காதீர்கள். அதிமுகவின் பொதுக்குழுவுக்கு எங்களால் தடை விதிக்க முடியாது” என்றனர்.

சென்னை

# எம்.பியின் தங்க பேனா திருட்டு



ஜனாதிபதி தேர்தலில், எதிர்க்கட்சி வேட்பாளராக, முன்னாள் அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா போட்டியிடுகிறார். ஆதரவு திரட்டுவதற்காக, இரு தினங்களுக்கு முன்னர், அவர் சென்னைக்கு வந்தார். கிண்டியில் உள்ள, ஐ.டி.சி கிராண்ட் சோழா நட்சத்திர ஹோட்டலில் தங்கி இருந்தார். கன்னியாகுமரி காங்கிரஸ் எம்.பி விஜய் வசந்த் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள், சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

அப்போது, விஜய் வசந்த் சட்டை பையில் இருந்த, 1.50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ‘மான்ட்பிளாங்க்’ பேனா திருட்டுப்போய் விட்டது. இந்தப் பேனாவை, மறைந்த தந்தையும், தொழில் அதிபருமான வசந்தகுமாரின் நினைவாக, விஜய் வசந்த் பயன்படுத்தி வந்துள்ளர். இந்தப் பேனா முனை, தங்கத்தால் செய்யப்பட்டது; அதில், வைரமும் உள்ளது.

விலை உயர்ந்த பேனா திருட்டு போனது குறித்து, விஜய் வசந்த் சார்பில், கிண்டி பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் தலைமையிலான பொலிஸார், பேனாவை திருடியவரை தேடி வருகின்றனர்.

சென்னை

# விவாகரத்து கேட்டதால் மனைவி, மகள் மீது சரமாரி வெட்டு

திருவள்ளூர், அப்துல்கலாம் தெருவைச் சேர்ந்தவர் சந்திரன் சேட்டு(52). இவரது மனைவி மஞ்சுளா (48). இவர்களது மகள் ஜெயஸ்ரீ (23). சந்திரனுக்கும், மஞ்சுளாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணமாக எட்டு ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறார்கள். இதற்கிடையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு மஞ்சுளா, கணவரிடமிருந்து விவாகரத்து கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு கடந்த இரண்டாம் திகதி விசாரணைக்கு வந்துள்ளது. அப்போது, தந்தைக்கு எதிராக ஜெயஸ்ரீ ஆஜரானதால், சந்திரன் ஆத்திரத்தில் இருந்துள்ளார்.

அதேதினம்இரவு எட்டு மணியளவில் ஜெயஸ்ரீ, மஞ்சுளா, அவரது உறவினர் ஆகியோர் தங்களது வீட்டருகே பேசிக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த சந்திரன், மகளையும் மனைவியையும் அசிங்கமாக திட்டி “என் மேலேயே கேஸ் போடுறீங்களா” எனச் சத்தம் போட்டு, தன் இடுப்பில்



மறைத்து வைத்திருந்த கத்தியால் ஜெயஸ்ரீயின் தலையில் வெட்டியுள்ளார். அப்போது மஞ்சுளா தடுத்தபோது, அவரது தலை, கை, கால் ஆகிய இடங்களில் வெட்டியுள்ளார். இதில் தாயும் மகளும் இரத்த வெள்ளத்தில் சரிந்தனர். அருகில் இருந்தவர்கள் சந்திரனை பிடிக்க முற்பட்டபோது, அவர்களையும் வெட்டிவிடுவதாக மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருமலை

# திருப்பதியில் ஒரேநாளில் ரூ. 6.19 கோடி காணிக்கை

திருப்பதி தேவஸ்தான வரலாற்றில் முதல்முறையாக, திங்கட்கிழமை (04) பக்தர்கள் ஆறு கோடி பத்தொன்பது இலட்சம் இந்திய ரூபாய்களை உண்டியல் காணிக்கையாகச் செலுத்தி உள்ளனர்.

2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அதிகபட்சமாக ரூபாய் 5.73 கோடி உண்டியல் மூலம் பக்தர்கள் காணிக்கை செலுத்தி இருந்தனர். இதுவே, இதுவரை அதிகபட்சமான ஒரு நாள் உண்டியல் வருவாயாக இருந்தது.

இந்நிலையில், 04ஆம் திகதி, உண்டியலில் பக்தர்கள் ரூ.6.19 கோடி காணிக்கை செலுத்தி உள்ளனர். ஒரு பக்தர் ஒரே கட்டாக ரூ.1.64 கோடியை காணிக்கையாக செலுத்தி இருந்தார். இவர் ஒவ்வோர் ஆண்டும் இதுபோல் அதிக தொகையை காணிக்கையாக செலுத்தி வருகிறார். அவர் யார், எந்த ஊரைச் சேர்ந்தவர் என்பது இதுவரை தெரியவில்லை.

புதுடெல்லி

# தலாய் லாமாவுக்கு மோடி பிறந்தநாள் வாழ்த்து

உலக அளவில் மிகவும் மதிக்கப்படும் திபெத்தியர்களின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவின் 87ஆவது பிறந்தநாள் நேற்று (06) கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி, தலாய் லாமாவை தொடர்புக்கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

இதுதொடர்பில், பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது: ‘திபெத்தியர்களின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமாவின் 87ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, அவரைத் தொலைபேசியில் தொடர்புக் கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தேன். அவரது நீண்ட ஆயுளுக்கும் நல்ல ஆரோக்கியத்துக்கும் நாங்கள் பிரார்த்திக்கிறோம்’ என்றுள்ளது. தலாய் லாமா, 1959 ஆம் ஆண்டு சீனாவைவிட்டு வெளியேறி, இந்தியாவில் வாழ்ந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.





சென்னை

# விஜயகாந்தை காட்டச் சொல்லி பிரேமலதாவுக்கு நெருக்கடி

தேசிய முற்போக்கு திராவிட கழக (தே.மு.தி.க) தலைவர் விஜயகாந்த், உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வருகிறார். நீரிழிவு நோய் காரணமாக, சமீபத்தில் அவரது கால் விரல்கள் அகற்றப்பட்டன. தற்போது, படுத்த படுக்கையாக வீட்டில் சிகிச்சையுடன் ஓய்வெடுத்து வருகிறார். இதற்காக, அவரது அறையிலேயே மருத்துவமனை வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

அவரது உடல்நலம் குறித்து வெளியாகும் செய்திகள் வதந்தி என, தே.மு.தி.க தலைமை கூறி வருகிறது. இந்நிலையில், விஜயகாந்தை பார்த்தே ஆக வேண்டும் என நிர்வாகிகள், தொண்டர்கள் பலர், அவரது வீட்டுக்கு வருகின்றனர். தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு அனுமதி கேட்கின்றனர்.மனைவி பிரேமலதா, அவரது இரண்டு மகன்கள், மைத்துனர் சுதீஷ் மற்றும் மாநில நிர்வாகிகளை அலைபேசி வாயிலாக தொடர்புகொள்ளும் தொண்டர்கள், விஜயகாந்தை சந்திக்க அனுமதி கேட்டு வருகின்றனர். இதனால், இவர்கள் தமது அலைபேசிகளை ‘ஸ்விட்ச் ஓப்’ செய்துள்ளனர்.

இத்தாலி

### இத்தாலியில் 70 ஆண்டுகளில் இல்லாத வறட்சி:

# அவசர நிலை பிரகடனம்

இத்தாலியில் மழையின்மை மற்றும் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக ஐந்து பிராந்தியங்களில் வறட்சி ஏற்பட்டுள்ளது.
ரோம், இத்தாலியில் கடுமையான வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதன் காரணமாக கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத வகையில் மிக மோசமான வறட்சி நிலையை அந்த நாடு எதிர்கொண்டுள்ளது.
குறிப்பாக இத்தாலியின் மிக நீளமான நதியான போ நதியை சுற்றியுள்ள 5 வடக்கு பிராந்தியங்கள் வறட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
இந்த வறட்சியால் இத்தாலியின் 30 சதவீதத்திற்கும் கூடுதலான விவசாய உற்பத்திகள்



பாதிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டின் விவசாயச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.
இந்நிலையில் மோசமான வறட்சியை எதிர்கொண்டுள்ள லோம்பார்டி, எமிலியா-ரோமக்னா, பிரியூலி வெனிசியா கியுலியா, பீட்மாண்ட், வெனெட்டோ ஆகிய 5 வடக்குப் பிராந்தியங்களில் இத்தாலி அரசு அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.



இதுகுறித்து அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'அவசர நிலை தற்போதைய சூழ்நிலையை அசாதாரண வழிமுறைகள் மற்றும் அதிகாரங்களுடன் நிர்வகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நிலைமை சீரடையாத பட்சத்தில் கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வியட்நாம்

# இது நாயா, பூனையா?

வியட்நாமைச் சேர்ந்த ஹாய் அன் மற்றும் துவான் தம்பதி செல்லப்பிராணியாக நாயை வளர்த்து வருகிறனர்.
இந்நாயானது பழங்கால இனமான ஹ்மாங் மற்றும் குட்டை கால் இனமான டிங்கோ உள்ளிட்ட அரிய இனங்களின் கலவை ஆகும்.
இதனால் இந்நாயானது பூனை போன்ற உடலமைப்பும் நீளமான உடலையும் கொண்டு காணப்படுகின்றது.
இந்நிலையில் இதுகுறித்து கருத்துத் தெரிவித்த துவான், "எங்களுடைய அதிர்ஷ்ட நாய் பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது. பார்க்க பூனை போல இருந்தாலும் இது நாய்தான். தற்போது 2 வயதான இதற்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருக்கின்றனர்" என்றார்.
இந் நாய்க்கென பேஸ்புக் பக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் சுமார் 24,000 பேர் இந் நாயினை பின்தொடர்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரான்ஸ்

# துருப்பிடித்த நிலையில் ஈபிள் கோபுரம் ?

உலக அதிசயங்களில் ஒன்றான பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரம் துருப்பிடித்த நிலையில் உள்ளதாக அந்நாட்டைச் சேர்ந்த பிரபல ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குஸ்டாவ் ஈபிள் என்பவரால் கட்டப்பட்ட முற்றிலும் இரும்பினாலான இந்தக் கோபுரம் 1,063 அடி உயரம் கொண்டதாகும்.
உலகில் அதிகம் பார்வையிடப்பட்ட சுற்றுலா தளங்களில் ஒன்றாக இந்த ஈபிள் கோபுரம் விளங்குகிறது.
இந்நிலையில் ஈபிள் கோபுரம் துருப்பிடித்து மோசமான நிலையில் இருப்பதாகவும், முழுமையான பழுதுபார்ப்பு தேவை என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.
ஆனால் பழுதுபார்ப்புக்கு பதிலாக ஈபிள் கோபுரம் வெறும் வர்ணம் பூசப்படுவதாகவும் நிபுணர்கள் இரகசிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.
2024ஆம் ஆண்டு பாரிஸில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியையொட்டி



60 மில்லியன் யூரோ (இலங்கை மதிப்பில் சுமார் 2,218கோடி ரூபாய் ) செலவில் ஈபிள் கோபுரம் வர்ணம் பூசப்பட்டு வருவதாகவும், ஈபிள் கோபுரத்தில் இப்படி மீண்டும் வர்ணம் பூசப்படுவது இது 20ஆவது முறை என்றும் நிபுணர்களின் இரகசிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
எனினும் ஈபிள் கோபுரத்தை பராமரித்து வரும் தனியார் நிறுவனம் இது குறித்து உடனடியாக எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

# தர்ப்பூசணிப் பழத்தை கொடுத்து வீடு வாங்கலாம்

சீனாவில் இயங்கிவரும் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் சமீப ஆண்டுகளாக கடும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றன.
இந்நிலையில் பிரபல ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்று, உள்ளூர் விவசாயிகளை ஈர்க்கும் வகையில் தர்பூசணி பழங்களை முன்பணமாக கொடுத்து வீடுகளை பதிவு செய்யலாம் என அறிவித்துள்ளது. சீனாவில் ஒரு கிலோ கிராம் தர்ப்பூசணி பழம் 20 யுவான்களுக்கு விற்கப்படுகின்றன. ஆகவே அதிகபட்சமாக 5,000 கிலோ கிராம் தர்ப்பூசணிப் பழங்களை கொடுத்து (அதன் மதிப்பான 100,000 யுவான்கள்) வீட்டினை முன்பதிவு செய்யலாம் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
இவ் அறிவிப்பானது மக்கள்



மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பிரித்தானியா

# 1,791 கோடி ரூபாய் செலவில் மின்னேற்றும் நிலையங்கள் திறப்பு

பிரித்தானியாவில் ஏராளமானோர் மின்சார வாகனங்களை பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக ஒக்ஸ்போர்ட் நகரில் பிரம்மாண்டமான மின்னேற்றும் நிலையமொன்று (Charging Stations ) திறக்கப்பட்டுள்ளது.
இங்கு ஒரே நேரத்தில் 42 கார்களை மின்னேற்றலாம் எனவும்,இது பொது மக்களிடையே மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் இம்



மின்னேற்றும் நிலையமானது இலங்கை மதிப்பில் சுமார் 1,791 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது எனவும், இங்கு 50 மெகாவாட் ஹைபிரிட் பட்டரி நிறுவப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# 2 மில்லியன்ல ஒன்றுதான் இப்படி இருக்குமாம்..



மிக மிக அரிய வகை கடல் உயிரினமாகக் கருதப்படும் , நீல நிற இறால் (Lobster) ஒன்று போர்ட்லேண்டைச் சேர்ந்த ஒருவரது வலையில் சிக்கியுள்ளது.
2 மில்லியன் இறால்களில், ஒன்று தான் இவ்வாறு காணமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் மரபணு குறைபாட்டின் காரணமாகவே இறால்கள் இவ்வாறு நீல நிறத்தில் மாறுகின்றன என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.




# எல்.பி.எல்லில் மூன்று தமிழர்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு  20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்) வீரர் தேர்வானது நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் ஜஃப்னா கிங்ஸ் அணியில் யாழ்பாணத்தைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த், தீஸன் விதுஷன், தெய்வேந்திரம் டினோஷன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
இதேவேளை, இலங்கையணியின் முன்னணி இளம் துடுப்பாட்டவீரரான பதும் நிஸங்கவை எந்தவொரு அணியும் தேர்வு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
ஒவ்வொரு அணியின் விவரங்களும் பின்வருமாறு,
ஜஃப்னா கிங்ஸ்: எவின் லூயிஸ், திஸர பெரேரா, ஹார்டஸ் விலோஜின், தனஞ்சய டி சில்வா, ஷொய்ப் மலிக், ஷஹ்னவாஸ் டஹானி, ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ், மகேஷ் தீக்ஷன, பினுர பெர்ணாண்டோ, டுனித் வெல்லலாகே, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், பிரவீன் ஜெயவிக்கிரம, சுமிந்த லக்ஷன், சதீர சமரவிக்கிரம, டில்ஷான் மதுஷங்க, நிபுன் தனஞ்சய, விஜயகாந்த் வியாஸ்காந்த், தீஸன் விதுஷன், தெய்வேந்திரன் டினோஷன், அஷான் றந்திக.
கோல் கிளாடியேட்டர்ஸ்: இமாட் வசீம், தனுஷ்க குணதிலக, பாஹீம் அஷ்ரஃப், துஷ்மந்த சமீர, ஜனமென் மலன், ஷெர்ஃபேன் ருதஃபோர்ட், அஸாம் கான், குசல் மெண்டிஸ், லக்ஷன் சந்தகான், நுவான் துஷார, சர்ஃபாஸ் அஹ்மட், புலின தரங்க, நுவனிடு பெர்ணாண்டோ, நிமேஷ் விமுக்தி, மொவின் சுபஷின்ஹ்கா, நிபுன் மலிங்க, சஷிந்து கொலம்பகே, லக்ஷன் கமகே, தரிந்து கௌஷால், சம்மு அஷான்.
கொழும்பு ஸ்டார்ஸ்: டுவைன் பிறிட்டோறியஸ், அஞ்சலோ மத்தியூஸ், ஆசிஃப் அலி, சரித் அஸலங்க, டொமினிக் ட்ரேக்ஸ், பஸல்ஹக் பாரூக்கி, நவீன்-உல்-ஹக், நிரோஷன் டிக்வெல்ல, தினேஷ் சந்திமால், தனஞ்சய லக்ஷன், கரிம் ஜனட், சீக்குகே பிரசன்னா, ஜெஃப்ரி வன்டர்சே, இஷான் ஜயரத்ன, முதித லக்ஷன், லக்ஷித மனசிங்கே, கெவின் கொத்திகொட, சத்துரங்க குமார, நவோட் பரணவிதான, சமோட் பட்டகே.
தம்ப்புள்ள ஜையன்ட்ஸ்: டார்சி ஷோர்ட், தசுன் ஷானக, பென் கட்டிங்க், பானுக ராஜபக்ஷ, சந்தீப் லமிச்சன்னே, டிம் செய்ஃபேர்ட், ஹைதர் அலி, சத்துரங்க டி சில்வா, ரமேஷ் மெண்டிஸ், நுவான் பிரதீப், ஷெல்டன் கோட்ரல், தரிந்து ரத்னாயக்கே, பிரமோத் மதுஷன், லசித் க்றொஸ்புள்ளே, கலன பெரேரா, டிலும் சுதீர, சஷிந்த ஜயதிலகே, துஷான் ஹேமந்த, சாஷா டி அல்விஸ், ரவிந்து பெர்ணாண்டோ.
கண்டி பல்கோன்ஸ்: கார்லோஸ் பிறத்வெய்ட், வனிடு ஹஸரங்க, பேபியன் அலென், சாமிக கருணாரத்ன, அன்ட்ரே பிளெட்சர், டெவால்ட் பிறெவிஸ், கிறிஸ் கிறீன், இசுரு உதான, மதீஷ பத்திரண, அஷேன் பண்டார, உஸ்மான் ஷின்வாரி, கமிந்து மெண்டிஸ், அஷான் பிரியஞ்சன், மினோத் பானுக, அவிஷ்க பெரேரா, அஷியன் டானியல், மலிந்த புஷ்பகுமார, ஜனித் லியனகே, லசித் அபேரத்ன, கவின் பண்டார.




# சி.பி.எல்லில் ஹஸரங்க, தீக்ஷன

மேற்கிந்தியத் தீவுகளின் உள்ளூர் இருபதுக்கு  20 தொடரான கரீபியன் பிறீமியர் லீக் (சி.பி.எல்) தொடரில் முதன்முறையாக இலங்கையணியின் வனிடு ஹஸரங்க, மகேஷ் தீக்ஷன ஆகியோர் விளையாடவுள்ளனர்.
சென். கிட்ஸ் அன்ட் நெவிஸ் பற்றியொட்ஸால் ஹஸரங்கவும், ட்ரின்பாகோ நைட் றைடர்ஸால் தீக்ஷனவும் கைச்சாத்திடப்பட்டுள்ளனர்.
கடந்தாண்டும் பற்றியொட்ஸுக்காக ஹஸரங்க விளையாடவிருந்தபோதும், தென்னாபிரிக்காவின் இலங்கைச் சுற்றுப்பயணத்தோடு ஒட்டிய காலத்தில் சி.பி.எல் நடைபெற்ற நிலையில் அவர் விளையாடியிருக்கவில்லை.

# இந்தியாவுக்கெதிரான தொடரைச் சமப்படுத்திய இங்கிலாந்து




இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து சமப்படுத்தியுள்ளது.
ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பேர்மிங்ஹாமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்று முன்தினம் முடிவடைந்த ஐந்தாவது டெஸ்டை வென்றதைத் தொடர்ந்தே 2-2 என தொடரை இங்கிலாந்து சமப்படுத்தியது.
ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 259 ஓட்டங்களுடன் ஆரம்பித்த இங்கிலாந்து மேலும் விக்கெட் எதையும் பறிகொடுக்காமல் வெற்றியிலக்கை எட்டியது. களத்தில் ஜோ றூட் ஆட்டமிழக்காமல் 142 ஓட்டங்களுடனும், ஜொனி பெயார்ஸ்டோ ஆட்டமிழக்காமல் 114 ஓட்டங்களுடனும் காணப்பட்டிருந்தனர்.
இப்போட்டியின் நாயகனாக பெயார்ஸ்டோவும், இங்கிலாந்தின் தொடரின் நாயகனாக றூட்டும், இந்தியாவின் தொடரின் நாயகனாக ஜஸ்பிரிட் பும்ராவும் தெரிவாகினர்.
ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: இங்கிலாந்து
இந்தியா: 416/10 (துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 146, இரவீந்திர ஜடேஜா 104, ஜஸ்பிரிட் பும்ரா ஆ.இ 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அண்டர்சன் 5/60, மத்தியூ பொட்ஸ் 2/105, ஜோ றூட் 1/23, ஸ்டுவர்ட் ப்ரோட் 1/89, பென் ஸ்டோக்ஸ் 1/47) இங்கிலாந்து: 284/10 (துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 106, சாம் பில்லிங்ஸ் 36, ஜோ றூட் 31, பென் ஸ்டோக்ஸ் 25, மத்தியூ பொட்ஸ் 19 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 4/66, ஜஸ்பிரிட் பும்ரா 3/68, மொஹமட் ஷமி 2/78, ஷர்துல் தாக்கூர் 1/48) இந்தியா: 245/10 (துடுப்பாட்டம்: செட்டேஸ்வர் புஜாரா 66, றிஷப் பண்ட் 57, இரவீந்திர ஜடேஜா 23, விராட் கோலி 20, ஷ்ரேயாஸ் ஐயர் 19 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 4/33, மத்தியூ பொட்ஸ் 2/50, ஸ்டுவர்ட் ப்ரோட் 2/58, ஜேக் லீச் 1/28, ஜேம்ஸ் அண்டர்சன் 1/46)
இங்கிலாந்து: 378/3 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 142, ஜொனி பெயார்ஸ்டோ ஆ.இ 114, அலெக்ஸ் லீஸ் 56, ஸக் க்றொலி 46 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 2/74)
போட்டியின் நாயகன்: ஜொனி பெயார்ஸ்டோ
இந்தியாவின் தொடரின் நாயகன்: ஜஸ்பிரிட் பும்ரா
இங்கிலாந்தின் தொடரின் நாயகன்: ஜோ றூட்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 07 ஜூலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.